Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 120 | வெள்ளிக்கிழமை | பங்குனி 13 ஆம் நாள் 26 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051


பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## மயங்கிய நிலையில் மீட்கப்பட்டவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
வீடொன்றில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட் 19 >

# யாழ். நகரின் மத்திய பகுதி முடக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாணம் நகரத்தின் மத்திய பகுதி 10 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. நேற்று இரவு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. 19 >



# கட்டுமீறியது கொரோனா!

யாழ். நகரப் பகுதியில்

## 66 பேருக்குத் தொற்று



யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் நேற்று 66 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக 19 >

## யாழ். நகரப் பகுதியில் எழுமாற்று பி.சி.ஆர்.

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் அனைவருக்கும் இன்று முதல் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தகநிலையங்கள், ஏனைய வர்த்தக நிலையங்களில் உள்ளவர்களுக்கே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (எ)

## அராலிவாசி உட்பட இருவர் வடக்கில் கொரோனாவுக்கு பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 26
வடக்கில் எகிறிவரும் கொரோனாத் தொற்றால் நேற்றும் இருவர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒருவரும் வவுனியா மருத்துவமனையில் ஒருவருமாக இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்தவர், அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 15 >

24 மணி நேரத்துக்குள்

## இந்திய மீனவர் 54 பேர் வடக்கு கடலில் கைது!

### கடற்படையின் திடீர் அதிரடிக்கு ஜெனிவா விவகாரம் காரணமா?

யாழ்ப்பாணம், மார்ச் 26
இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் வடக்கு மீனவர்களால் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தபோதும், கொரோனாவை காரணமாகக் காண்பித்து கைது நடவடிக்கைகளைத் 19 >

## யாழ்ப்பாணம் மீண்டும் முடங்குவதற்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழில் மீண்டும் முடக்க நிலை ஏற்படாதிருக்க பொதுமக்கள் சுகாதார பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என யாழ். மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்தார். 19 >

## ஐ.நா. தீர்மானத்தால் இலங்கைக்கு ஆபத்து

கொழும்பு,மார்ச் 26
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் பயங்கரமானதொன்றாகும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு பொருளாதாரத் தடைகளை விதிக்கக்கூடும். 19 >

## அட்டகாசம் செய்த இருவர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 26
இளவாலை, பல்லசுட்டியில் 15 >

## வடக்கில் நேற்று 80 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 26
வடக்கு மாகாணத்தில் நேற்று 80 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19 >

## கோட்டைப் பகுதிக்கு யாழ். பஸ் நிலையம்!

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ள நிலையில், கடும் சுகாதாரக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 19 >

## பாடசாலைகள் இயங்கும் தனியார் வகுப்புக்குத் தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் மாநகரத்தின் மத்திய பகுதி முடக்கப்பட்டுள்ளபோதும், பாடசாலைகள் வழமைபோன்று இயங்கும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் 19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்குநிலை விவசாய சங்கங்களை மீள இயங்கவைக்க நடவடிக்கை

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 26**

**யாழ்ப்பாண மாவட்டத்தில், தற்போது செயற்பாட்டில் இல்லாத விவசாய கூட்டுறவுச் சங்கங்களை மீள இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை தேசிய உர நிலைய அலுவலகம் ஒன்று இயங்காத நிலையில், தற்போது அதனை யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற, மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்ட விவசாயிகள் மற்றும் மாவட்ட பண்ணையாளர்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

கிராமங்களில் 75 சதவீதமான மக்கள் வசித்து வருகின்ற நிலையில் அவர்களுடைய மனைப்பொருள் தாரத்தை விருத்தி செய்வதற்குரிய அரச கொள்கையின் அடிப்படையில் பல்வேறுபட்ட மானியத் திட்டங்கள் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல வங்கிகள் ஊடாகவும் பல்வேறுபட்ட இலகு கடன்கள், வட்டி குறைந்த அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் விவசாயிகளுக்கு அதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளாகிய கட்டாக்காலி மாடுகள், விவசாய நிலங்கள் நிரப்பப்படுதல், விவசாய நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்தல் மற்றும் கட்டடங்கள் அமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. அதற்கு விவசாய கம்நல சேவை திணைக்களமும் பிரதேச செயலர்களும் சம்பந்தப்பட்ட தரப்பினரோடு இணைந்து விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்த போகத்தில் பெரும் போகத்தின்போது விவசாயிகள் எதிர்கொண்ட இழப்பு விவரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதேநேரத்தில் அவர்களுக்குரிய தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் நடவடிக்கைகள் விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை தொடர்பிலும் ஆராயப்பட்டது. - என்றார்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட கமநல சேவைகள் பணிப்பாளர், மாகாண விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், விதை உற்பத்தி திணைக்கள அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-20)

# வாகனத்தின் கதவு திறந்ததால் வீதியில் வீழ்ந்த மாணவி சாவு

கொழும்பு, மார்ச் 26

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனம் ஒன்றின் கதவு திடீரென்று திறந்ததால், வாகனத்திலிருந்து வீதியில் வீழ்ந்த ஒரு மாணவி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெல்லவாய - எல்ல வீதியில் ஹுணுகெட்டிய சந்தியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

பாடசாலையிலிருந்து மாணவர்களை வழமை போன்று அவரவர்களின் வீடுகளுக்கு ஏற்றிச் சென்றுகொண்டிருக்கும் போதே சம்பவம் இடம்பெற்றது.

பரகஹறாவ பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் கடும் காயங்களுக்கு உள்ளான சிறுமி வெல்லவாய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வாகனத்தின் சாரதியை வெல்லவாய பொலிஸார் கைதுசெய்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-இ)

## சங்கானை சிவப்பிரகாசவுக்கு

# அதிபரை நியமிக்குமாறு பெற்றோர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் நியமனம் தாமதமடைகின்றது என்று அந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

குறித்த பாடசாலையின் அதிபரை இடம்மாற்றுமாறு கடந்த மாதம் 22ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த அதிபர், தானாக முன்வந்து ஒரு வார காலத்துக்குள் வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். இருப்பினும் ஒரு மாத காலமாகியும் குறித்த பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை. எனவே தமது பிள்ளைகளின் கல்வியை கருத்தில்கொண்டு குறித்த பாடசாலைக்கு சிறந்த அதிபரை உடனடியாக நியமிக்க கல்விச் சமூகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (த-319)

# பாடசாலைகளுக்கு 9ஆம் திகதி விடுமுறை

## 19இல் திறக்கப்படும்

நாட்டிலுள்ள பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக ஏப்ரல் 9ஆம் திகதி மூடப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புதுவருடம் நிறைவடைந்த பின்னர் இம்மாதம் 19ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்தது.

மேல் மாகாண பாடசாலைகளில் அனைத்துத் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகள், மார்ச் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீண்டும் திறக்க கல்வி அமைச்சு புதிய வழிகாட்டுதல்களை நேற்று வெளியிட்டுள்ளது. அதன்படி 15 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட வகுப்புகளை தினசரி அடிப்படையில் நடத்தலாம். ஆயிரத்து 1630 மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வாரத்துக்கு ஒரு குழுவுக்கு மட்டுமே வகுப்புகளை நடத்த முடியும். 30 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு சம எண்ணிக்கையிலான நாள்களில் வகுப்புகளை நடத்த முடியும். ஏதேனும் ஒரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் அந்தப் பகுதி பாடசாலைகள் மூடப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-இ)

# மாநகர மேயர் மணிவண்ணன் கிளி. சிகிச்சை நிலையத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நேற்று கிளிநொச்சி, கிருஸ்ணபுரம் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நேற்று மதியம் நோயாளர் காவு வண்டிமூலம் அவர் சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கிருஸ்ணபுரம் கொரோனா சிகிச்சை மையத்தில் தற்போது அங்கு 110 பேர் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதாரப் பணிமனை தெரிவித்தது.

அதேவேளை, வடக்கு மாகாணத்தின் அதியுயர் பதவிகளில் உள்ள அதிகாரிகள், பிரதேச சபைத் தவிசாளர்கள் என 40க்கும் மேற்பட்டவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களை நவீனப்படுத்தல் தொடர்பான ஆய்வரங்கில் பங்குகொண்டவர்களே சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.



கடந்த 23, 24ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனும் கலந்துகொண்டுள்ளார். அதையடுத்தே அதில் கலந்துகொண்டவர்கள் தங்களை சுயதனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பி.சி.ஆர். செய்வதாயின் 8 மணிக்கு முன் வரவும்

## சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

சாவகச்சேரி, மார்ச் 26

சாவகச்சேரி சுகாதார மருத்து அதிகாரி பணியகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நடத்தப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றவுள்ளோர் காலை 8 மணிக்கு முன்னர் வருகை தரவேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பி.சி.ஆர். பரிசோதனைகள் காலை 7.30 மணி தொக்கம் 8.15. மணி வரை மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

நேற்று காலை 8 மணிக்குப் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (த-9)

# தீவக போக்குவரத்துக்கு விரைவில் புதிய பஸ்கள்

## இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 26

வடக்கிலுள்ள தீவுகளுக்கான போக்குவரத்து சேவையை மேம்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தீவகங்களில் தற்போது மிகப்பழைய பஸ்களே போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. புதிய பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவை கிடைத்தவுடன் தீவகங்களில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை, வடக்கில் போக்குவரத்துக்கான விவகாரங்களைக் கையாழ்வதற்கென்று ஒரு குழுவை விரைவில் அமைத்து, அதற்குத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரை ஏமாற்றும் தீர்மானமே ஜெனிவாவில் நிறைவேற்றம்!

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 26**

**"இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசு, தான் மேற்கொண்ட குற்றங்களுக்காக, தன்னைத்தானே விசாரிக்கக் கோரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானம் இயற்கை நீதிக்கு முரணானது. இது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஏமாற்றும் தீர்மானமாகும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்த அரசால் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட இனப்படுகொலை உட்பட அனைத்துக் குற்றங்களையும் முழுமையாக பக்கச்சார்பற்ற முறையில் விசாரிக்கக்கூடிய ஒரு சர்வதேச பொறிமுறையையே பாதிக்கப்பட்ட மக்களாகிய தமிழர்கள் கேட்டு நின்றார்கள்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில், இனப்படுகொலை உட்பட பல்வேறு குற்றங்களை இழைத்த, குற்றங்களின் பங்காளியாக உள்ள இந்த அரசையே, தனது குற்றங்களை விசாரிக்கக் கோரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானம் மிகவும் ஏமாற்றகரமானது. இயற்கை நீதிக்கு முரணானது. உண்மையில் இது இலங்கை அரசைக் காப்பாற்றி இருக்கின்றது.

2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில் சர்வதேச வழக்குத் தொடுநர்கள், சர்வதேச நீதிபதிகளை விசாரணையில் இணைத்துக்கொள்வது பற்றி பெயரளவிலேனும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த 46/1 தீர்மானத்தின் செயற்பாட்டுப் பந்தி 9இன் பிரகாரம், குற்றத்தின் பங்காளிகளான இந்த அரசையே, தான் இழைத்த குற்றங்களை விசாரிக்கக் கோரும் இயற்கை நீதிக்கு முரணான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களாகிய தமிழர்களைப் பொறுத்த வரையில், நீதிக்கான பொறுப்புக்கூறலைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானம் மிகவும் பலவீனமானதும் வலுவற்றதுமாகும். குற்றவாளியான இலங்கை அரசை மீண்டும் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, குற்றங்களை இழைத்த இலங்கையே, தனது குற்றங்களை விசாரிக்க வேண்டும் எனக் கோருகின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்றமைக்காக சுமந்திரன், 'நாட்டுக்குத் துரோகம் இழைத்து விட்டார்' என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிடுகின்றார்கள். ஆனால், சுமந்திரன் உண்மையில் இலங்கையைக் காப்பாற்றியுள்ளார் என்பதே உண்மையாகும். அந்தவகையில் அவர், இலங்கை அரசுக்கு அல்ல, மாறாக தனக்கு வாக்களித்துத் தம்மைத் தெரிவு செய்த, தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களுக்கே துரோகம் இழைத்துள்ளார்.

உண்மையில் இந்த ஐ.நா.தீர்மானங்கள் தமிழ் மக்களுக்கு நீதி கோரும் நோக்கில் நிறைவேற்றப்பட வில்லை. முற்றிலும் சீனாவை நோக்கி சாய்ந்திருக்கும் இந்த அரசுக்கு, தத்தமது புவிசார் அரசியல் நலன்களைப் காப்பாற்றிக்கொள்ள இந்திய மற்றும் மேற்குலக நாடுகள் கொடுக்கின்ற ஓர் அழுத்தமாகவே இதை நாம் பார்க்கின்றோம். அந்த நோக்கத்துக்காக அந்த வல்லரசுகள் தமிழர்களை ஒரு கருவியாக மட்டுமே பாவித்துள்ளன. இந்திய மற்றும் மேற்குலக நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையிலான இந்த புவிசார் அரசியல் போட்டியில் சீனாவின் பக்கம் சார்ந்துள்ள இந்த அரசைத் தமது வழிக்குக் கொண்டுவருவதற்காக தமிழர்கள் வெறுமனே பகடைக்காய்களாக மட்டுமே பாவிக்கப்படுகின்றார்கள் என்பதே கவலைக்குரிய விடயமாகும்" - என்றார். (ம-22)

---

## சைக்கிள் திருட்டு; பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, மார்ச் 26

வவுனியா பஸ் நிலையப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள், திருட்டுப் போயுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்மாச்சி உணவகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் தனது சைக்கிளை நிறுத்தி விட்டு உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டு மீண்டும் இரவு 10.30 மணியளவில் வந்து பார்த்தபோது சைக்கிள் திருட்டுப் போயிருந்தமை தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக வவுனியா பொலிஸில் குறித்த இளைஞனால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், அப்பகுதியில் காணப்படும் சி.சி.ரி.வி.கமராக்களின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-110)

---

## புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்

முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியை அண்டிய வீடுகளில் அண்மை நாள்களாக திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பகல்வேளைகளில் வீடுகளில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறித்த திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

அண்மைய நாள்களில் மூன்று கொள்ளைச் சம்பவங்கள் புதுக்குடியிருப்பு நகரை அண்டிய பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நேற்றுமுன்தினம் எவரும் இல்லாத சந்தர்ப்பம் பார்த்து திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து அறைக்குள் வைக்கப்பட்டிருந்த 15 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். (ஐ-19)

---

## மலேரியா தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு ஓவியப் போட்டி

சாவகச்சேரி, மார்ச் 26

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் மலேரியாத் தடுப்பு இயக்கத்தால் 11 வயது தொடக்கம் 15 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கிடையிலான ஓவியம் வரைதல் போட்டி நடத்தப்படவுள்ளது. இதன்படி, 'மலேரியா அற்ற இலங்கையை வைத்திருப்போம்' என்னும் தலைப்பில், பிராந்திய மற்றும் தேசிய ரீதியில் போட்டி நடத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பிராந்திய நிலைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே 5 ஆயிரம் ரூபா, 4 ஆயிரம் ரூபா, 3 ஆயிரம் ரூபா என்ற ரீதியிலும், தேசிய நிலையில், வெற்றி பெறும் மாணவர்களுக்கு முறையே 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரம் ரூபா, 5 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை தாம் கல்வி பயிலும் பாடசாலைகளில் பெற்று, பெயர், வயது, பிறந்த திகதி, முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களைப் பதிவு செய்து பாடசாலைகள் ஊடாக வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்புமாறு தென்மராட்சி கல்வி வலயத்தால் கோரப்பட்டுள்ளது. (வ-9)

---



## ஒலுமடுவில் புத்தரிசி தினம்

முல்லைத்தீவு, மார்ச் 26

54ஆவது தேசிய புத்தரிசி விழா முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமலநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.குணாளன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிராம அலுவலர் மற்றும் கமநல சேவை நிலைய அரச அலுவலர்கள் மற்றும் கிராம விவசாய பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அரிசிகளை வழங்கினர். (வ-இ)

---

## அருகில் மயானம் இருந்தும் அலைய வேண்டிய நிலை!

### பச்சிலைப்பள்ளி மக்கள் அவலம்

பளை, மார்ச் 26

500 மீற்றர் தூரத்தில் இந்து மயானம் இருக்க, 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு சடலத்தைக் கொண்டு செல்லும் அவல நிலையை பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்கள் எதிர்கொள்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து சென்ற நிலையில் பின்னர் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள குருடியன்காடு என்னும் இந்து மயானத்தை அயலில் உள்ள இத்தாவில், முகமாலை, கச்சார்வெளி, செல்வபுரம், வேம்பொடுகேணி மற்றும் இந்திராபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்துக் குடும்பங்கள் பயன்படுத்தி வந்தன.

இடப் பெயர்வின் பின்னர் குறித்த மயானத்தில் வெடி பொருள்கள் பெருமளவில் காணப்படுகின்றன எனக் கூறி மயானம் துப்புரவு செய்யப்படவில்லை.

இதனால் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதுவரை அப்பகுதிகளில் மரணிப்போரின் சடலங்கள் 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள தம்பகாமம் மற்றும் அல்லிப்பளை போன்ற இடங்களில் உள்ள இந்து மயானங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தெரிவித்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு விரைவில் குறித்த இந்த மயானத்தில் உள்ள வெடி பொருள்களை அகற்றி, மக்களின் பாவனைக்கு விடுவிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தீவுகளுக்கு 'அம்புலன்ஸ்' படகுகள்!

## சேவையை ஆரம்பிக்குமாறு வலியுறுத்து

**கொழும்பு,மார்ச் 26**
**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தீவுகளுக்கு அம்புலன்ஸ் படகுச்சேவைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் வேண்டுகோள் விடுத்தார்.**

அனலைதீவு, நெடுந்தீவு, நயினா தீவு, எழுவைதீவு ஆகிய தீவுகளுக்கு அரச அம்புலன்ஸ் படகுச் சேவை இல்லாதுள்ளது. யாழ். மாவட்டத்தில் தரைத் தொடர்பு இல்லாத தீவுகள் அனைத்திலும் இதே நிலை தான் காணப்படுகின்றது. அதேபோன்று வேலணை, ஊர்காவற்றுறை மருத்துவமனைகளும் குறைபாடுகளுடன் இயங்குகின்றன.

மிகவும் குறைபாடுகளுடன் இயங்கும் நெடுந்தீவு மருத்துவமனையிலிருந்து. யாழ். போதனா மருத்துவமனைக்கு நோயாளிகளைக் கொண்டுவர அரச படகுச் சேவையொன்று உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அங்கு ஒருவருக்கு பாம்பு தீண்டினாலோ அல்லது திடீர் சுகவீனமடைந்தாலோ அவரை உடனடியாக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரக்கூடிய வசதிகள் இல்லை. நெடுந்தீவிலிருந்தான 13 கடல் மைல்கள் பயணம் மிகவும் ஆபத்தானது. அரச ஊழியர்கள் முதல் அனைத்துத் தொழிலாளர்களும் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தான் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உறுதியளித்தார். (க-22)

## அரச பஸ் சேவையை ஆரம்பிக்க கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 26
பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரம் கடந்த போதிலும் இன்னமும் தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கான அரச பாடசாலை பஸ் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் தனியார் பஸ் சேவைகளை பயன்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது என பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர்.

இதன்படி உசன் தொடக்கம் நாவற்குளி வரையான பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாணப் பாடசாலைகளிலும் சாவகச்சேரி பாடசாலைகளிலும் கற்கைக்காக செல்கின்றனர். எனவே மீண்டும் அரச பஸ் சேவையை எதிர்பார்க்கின்றனர் எனத் தெரிவித்தனர். (ய-9)

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சட்டத்தில் விரைவில் திருத்தம்

### அமைச்சர் பந்துல உறுதி



கொழும்பு, மார்ச் 26
நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முசாமில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
உலகின் புதிய சந்தை மாற்றங்களுக்கு அமைவாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இணையத்தள மூலமாக வர்த்தக நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இணையத்தள வர்த்தகத்தில் ஈடுபடுவோரை பாதுகாப்பதற்காக சட்டவிதிகள் இந்தத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2003 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதுவரையில் தற்போதைய இணையத்தள வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் முழுமைப்படுத்தப்படவில்லை. பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய ஒருவகை தேங்காய் எண்ணெய் சந்தைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து வர்த்தக அமைச்சு நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இவ்வாறான தேங்காய் எண்ணெய் சந்தையில் இருக்குமாயின், இதுதொடர்பில் தகவல்களை வழங்கும் உரிமை நுகர்வோருக்கு உண்டு- என்றார். (ற-இ)

## மாநகர முதல்வர் மணிவண்ணனுடன் தொடர்பை பேணியோர் அறிவிக்கவும்

யாழ்ப்பாணம்,மார்ச் 26
கொரோனாத் தொற்றுறுதியான யாழ்ப்பாண மாநகர முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுடன் கடந்த ஒரு வாரமாக தொடர்புகளைப் பேணியவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சுகாதாரத்துறையினர் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் மணிவண்ணனுக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் நெல்லியடியில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துக்கொண்ட நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் மணிவண்ணன் சுயதனிமைப்படுத்தலை மேற்கொண்டார். இந்த நிலையில் இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து மாநகர முதல்வர் மணிவண்ணனுடன் கடந்த 16 ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்பை பேணியவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சுகாதாரத்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அவ்வாறு தொடர்புகளைப் பேணியவர்கள், பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியுடன் அல்லது சுகாதாரத் திணைக்களத்தின் 021 222 6666 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-இ)

## தவிசாளர் உள்ளிட்ட மூவர் தனிமையில்

சாவகச்சேரி,மார்ச் 26
சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் சட்டத்தரணிகள் இருவர் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் நேற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் விடுத்த வேண்டுகோளையடுத்து அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் என்ற அடிப்படையில் இவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-9)

## 4 தமிழருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26
நீதிமன்றங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ளவர்களை பதிவாளர் தரம் 111 க்கு உயர்த்தும் பதவி உயர்வுப் பரீட்சையில் நான்கு தமிழர்கள் சித்திபெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் நீதிமன்றங்களில் காணப்படும் பதிவாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த 2019 ஜூன் மாதம் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களில் மூவர் சாவகச்சேரி நீதிமன்றிலும் ஒருவர் யாழ்ப்பாண நீதிமன்றிலும் கடமையாற்றுகின்றனர்.

சாவகச்சேரி நீதிமன்றில் கடமையாற்றும் மூவரில் ஒருவர் சம்மாந்துறை நீதிமன்றுக்கும், ஒருவர் திருகோணமலை நீதிமன்றுக்கும், மற்றொருவர் மன்னார் நீதிமன்றுக்கும் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தேசிய விளையாட்டு தினமாக ஜூலை மாதம் 31ஆம் திகதி!

தேசிய விளையாட்டு தினமாக ஜூலை 31ஆம் திகதியை அறிவிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதற்கான முன்மொழிவை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். 2014ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 6ஆம் தகிதி தேசிய விளையாட்டு தினமாக கருதப்படுகிறது. இருப்பினும், ஏப்ரல் மாதத்துக்குள் நாட்டில் பண்டிகை மற்றும் புத்தாண்டு ஏற்பாடுகளால் அந்தக் காலத்தில் மக்கள் கவனத்தை ஈர்ப்பதில் உள்ள சிரமத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய விளையாட்டு தினத்தை திருத்த இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. (வ-இ)



மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒட்டறுத்தகுளம் மற்றும் நட்டாங்கண்டல் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இலவச தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவைகளை கடந்த செவ்வாய்க்கிழமை மாந்தை கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அந்தந்தப் பிரிவுகளின் பொதுநோக்கு மண்டபங்களில் நடத்தினர். (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்து என்ன செய்யப் போகிறோம்?

முழு நாட்டையும் பௌத்த – சிங்கள வலயமாக்கும் பேரின வாத அரசின் நாசகார திட்டமிடல் செயற்பாடுகள் தீவிர முனைப்புடன் முன்னெடுக்கப்படும் சூழலில் நாட்டின் சிறுபான்மை இனத்தவர் அனைவரதும் எதிர்கால வாழ்வியல் இருப்பென்பது முற்றிலும் கேள்விக்குறியாக மட்டுமல்லாது பெரும் அச்சம் தருவதாகவும் காணப்படுகின்றது. அதனால் சிறுபான்மையினத்தவர்கள் அதலபாதாளம் நோக்கியதான பன்முகப்பட்ட ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்குமென துறை சார் நிபுணர்களதும், ஆய்வாளர்களதும் எதிர்வு கூறல்கள் எச்சரிக்கின்றன.

இது ஒரு கற்பிதமான கருத்தியல் என எவராலும் புறந்தள்ளி விட முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது, ஈழத்தமிழர்கள் வாழ்வில் எந்த வித மாற்றத்தையும் சாதகமானதாக ஏற்படுத்தி விடாது என்பது உண்மை. இது தொடர்பாக மிகத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் இப்பகுதியில் பலதடவை வற்புறுத்தியுள்ளோம். இந் நிலையில் ஐ.நா.வில் இலங்கைக்கு ஏற்பட்ட பின்னடைவு என்பது அவமானமே. இதனைச் சாதாரணமான விடயமாக எவரும் கருத முடியாது.

இந்தத் தீர்மான வரைவு என்பது, இலங்கையில் தமிழர்கள் போர்க் காலத்தில் எதிர்கொள்ள நேர்ந்த இன அழிப்பை இலக்காகக் கொண்ட மானுடப் பேரவலத்தைச் சுருக்குத் தடமாகப் பயன்படுத்தி சர்வதேச சமூகம் தமது அரசியல் மற்றும் பொருளாதாரம் சார் அரசியல் அனுகூலங்களை வென்றெடுக்கக் கையாண்ட சிக்கலான பொறிமுறையே ஆகும்.

தமிழ் மக்களுக்கான நீதியை இத்தீர்மானம் எந்தவகையிலாவது பெற்றுக் கொடுக்குமா? என்ற அங்கலாய்ப்பு அவையில் அங்கம் வகித்த நீதிசார் தரப்பினரிடமும் இருந்தாலும் "எமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும்" என நினைப்போர்க்கும் இத் தீர்மானம் தமது தனிப்பட்ட அரசியல் இலக்கு நோக்கிய நலன்களுக்கு காரணமாக இருக்கும். இந் நம்பிக்கையில் இந்த தீர்மான வெற்றியின் பின்னணியில் இயங்கியவர்களுக்கு நன்றியும் வாழ்த்துக்களும் கூற முனைவது இயல்பேயாகும். அதுதான் அவர்களில் சுயம் எனலாம்.

அதே சமயம், இத் தீர்மானத்தை ஆதரித்து முன்னணியில் செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பைக் கொண்ட நாடாக தமிழர் தரப்பினரால் (நம்பிக்கையற்ற நிலையிலும்) எதிர்பார்க்கப்பட்ட இந்தியா தனது ''விலாங்கு மீன்'' மூலோபாயத்தை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது.

நியாயத்தை நீதியை வெளிப்படையாக எதிர்ப்பவனை விடவும், அதனை ஆதரிக்காது நடுநிலை வகிப்பவன் தான் ஆபத்தான பேர் வழி. இந்தியா இந்த வகையில் தான் யார் என்பதைத் தமிழ் மக்களுக்கு மறுபடியும் இனம் காட்டியுள்ளது.

இந்த ''மதில் மேல் பூனை'' நிலைப்பாட்டை இந்தியா எடுத்ததையும் நன்றியுடன் நோக்கும் பரிதாபத்திற்குரியவர்களும் உண்டு. அது அவர்களின் சுயம். அதைவிடவும் அவர்களிடம் அர்த்தமுள்ளதாக எதனையும் எதிர்பார்க்கவே முடியாது.

சரி, ஜெனிவாவும் தன் முடிவை வெளியிட்டு விட்டது. இந்தியாவும் தனது கையறு நிலையை வெளிக்காட்டிவிட்டது.

இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானம் இலங்கைக்கும் – ஜெனிவாவுக்கும், அதாவது தீர்மானத்தை முழுமையாக அமுல் செய்வதற்கான நடைமுறைப்படுத்தல் அல்லது புறக்கணித்தல் தொடர்பான இடையிலான விவகாரமாகும்.

இந்தியா மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை எவ்வாறு எதிர்காலத்தில் பேணப்படும் என்பது தமிழ் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம்.

தமிழ் அரசியல்வாதிகளுக்கு....

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை சொல்லியுள்ள செய்தி இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவை நடந்து உண்மைதான் என்பதேயாகும். இந்த நிலைப்பாட்டை முன்வைத்து அதனை ஆதாரமாகக் கொண்டு தமிழர் தமக்கான நீதி கோரல் போராட்டத்தை முன்னெடுக்க அடுத்த உடனடி நகர்வாக எதனை முன்னெடுக்கப் போகிறார்கள் என்பதே இன்றைய கேள்வி...

அவர்கள் அடுத்த ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வு வரை காத்திருக்கப் போகிறார்களா? அப்படியாயின் அதுதான் அவர்கள் செய்யும் மிகப் பெரும் வரலாற்று தவறாக இருக்கும்.




## கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்.குடாநாடு முடங்கும் நிலை

### எச்சரிக்கை விடுக்கிறது யாழ்.வணிகர் கழகம்

**யாழ்ப்பாணம், மார்ச் 26**

**"யாழ். குடாநாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்களும், வர்த்தகர்களும் சுகாதார நடைமுறைகளை சரியாகப் பின்பற்றத் தவறின் குடாநாட்டை முடக்க வேண்டிய நிலைகூட ஏற்படலாம்" என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
யாழ்ப்பாண நகர் சந்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது 9 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.
தற்போது பண்டிகைக் காலம் என்பதால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளிகளைப் பேணி தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் வியாபார நிலைய உரிமையாளர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களில் கடமையாற்றுவோர் ஏற்கனவே சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவதன் மூலமே இந்த கொரோனாத் தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் - என்றார். (ஐ-20)

## விதைநெல் சேமிப்பிலும் விவசாயிகள் ஈடுபடவேண்டும்

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல்லுக்கான தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக சிறுபோகத்தின் போது விதை நெல் சேமிப்பிலும் விவசாயிகள் ஈடுபடவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மேற்கு குடமுருட்டி மற்றும் கரியாலைநாகபடுவான் ஆகிய குளங்களுக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
விவசாயிகள் நெல் உற்பத்தியை மட்டும் நம்பி விவசாயத்தில் ஈடுபடக்கூடாது. இலாபம் தருகின்ற உப உணவுப் பயிர்ச்செய்கையிலும் கூடுதலாக ஈடுபட வேண்டும். இயற்கை உரங்களைக் கூடுதலாகப் பயன்படுத்துங்கள். குறிப்பாக நோய் தொற்றிய விதை நெல்லை மீண்டும் பயன்படுத்த வேண்டாம். அத்துடன் சிறுபோக விவசாயத்தின் போது அடுத்த காலபோகத்துக்கான விதை நெல்லைச் சேமிப்பதன் மூலம் காலபோக விதை நெல் நெருக்கடியை நிவர்த்தி செய்து கொள்ளலாம் - என்றார். (ஐ-13)

## தொல்பொருள்களின் போர்வையில் தமிழர்களின் வளங்கள் சுரண்டல்

### சாணக்கியன் இடித்துரைப்பு

கொழும்பு,மார்ச் 26
தொல்பொருள்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களின் வளங்கள் சுரண்டப்படுகின்றன. இதற்கு உறுதுணையாக இல்லாமல் அதற்கு எதிராகத் தமிழ் அரசியல்வாதிகள் குரல் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசுடன் இணைந்து செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். எங்களுடைய பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கு அவர்கள் முன்வர வேண்டும். பாரம்பரியமான நிலங்களை அபகரித்தல், மதஸ்தலங்கள் அபகரிப்பு உள்ளிட்டவற்றை நிறுத்தி, முழுமையான அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும். அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் எங்களுடைய நில அபகரிப்பை அவர்கள் நிறுத்த வேண்டும்– என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா சுற்றுலா மையத்தின் குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் நகரசபை தவிசாளர்

**வவுனியா, மார்ச் 26**

**வவுனியா சுற்றுலா மைய விடயத்தில் நகரசபையின் குத்தகை ஒப்பந்தம், குத்தகையாளரால் மீறப்பட்டுள்ளது என வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார். வவுனியா சுற்றுலாமைய விவகாரம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வவுனியாவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா மாவட்ட மக்களுக்கான பொழுதுபோக்கு மையம் ஒன்றை அமைத்திருந்தோம். அதை கேள்விகோரல் மூலமாக ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கியிருந்தோம். குறித்த குத்தகைதாரருக்கு எங்களது அனுமதி இல்லாமல் கட்டடங்களை அமைக்க முடியாது போன்ற பல்வேறு நிபந்தனைகளை விதித்திருந்தோம். அந்த நிபந்தனைகளை மீறி புதிய கட்டுமானங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அந்த புதிய கட்டடங்களை, கடந்த 15 ஆம் திகதிக்கு முன்பாக அகற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கியும், அது அகற்றப்படாமல், மறுநாள் மேலும் கிரவல் மண் அங்கு கொட்டப்பட்டது. அவற்றை அகற்ற நகரசபை ஊழியர்களையும் இயந்திரங்களையும் அனுப்பிவைத்தபோது, அவை உட்செல்லமுடியாதபடி சுற்றுலா மையத்தின் பிரதான கதவு மூடப்பட்டிருந்தது. இவை அனைத்தும் எமது ஒப்பந்தத்தை மீறும் செயல்களே. எம்மால் அனுமதி வழங்கப்படாமல் அமைக்கப்பட்ட அனைத்து கட்டடங்களையும் நாளைக்குள் (இன்று) அகற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம். அதற்குள் அகற்றாதுவிடின் எதிர்வரும் 29 ஆம் திகதி அதனை அகற்றுவதற்கு நகரசபை நடவடிக்கை எடுக்கும். நகரசபை அதனை அகற்றினால் குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி, அவரது ஒப்பந்தம் ரத்துச்செய்யப்பட்டு, மீள கேள்விகோரப்பட்டு வேறு நபர்களுக்கு வழங்கப்படும் - என்றார். (வ-110)

ரூ.7 மில்லியன் செலவில்

# குடமுருட்டிக் குளம் விரைவில் சீரமைப்பு

கிளிநொச்சி, மார்ச் 26

7 மில்லியன் ரூபா செலவில் குடமுருட்டிக்குளம் விரைவில் சீரமைக்கப்படவுள்ளது என்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்தார்.

குடமுருட்டிக் குளத்துக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பெருமழையின் போது குடமுருட்டிக்குளத்தைப் பாதுகாப்பதில் இராணுவத்தினரும் விவசாயிகளும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கினர். குடமுருட்டிக் குளத்தைப் பொறுத்த வரையில் வேகமாக நீர் வற்றுகின்ற நிலைமை காணப்படுகின்றது. காரணம் ஏனைய குளங்களில் குளத்தின் உட்பகுதியில் கிரவல் மண் காணப்படும். குடமுருட்டிக் குளத்தின் உட்பகுதியில் கிரவல் மண் இல்லை. இதன் காரணமாக வேகமாக நீர் வற்றுகின்றது. இதற்கென ஏழு மில்லியன் ரூபா நிதியில் குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடம் பெறவுள்ளன. அத்துடன் சிறுபோக நெற்செய்கையை உரிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்து குளத்தின் வேலைகளை முன்னெடுப்பதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ச-13)

# முக்கொம்பன் பாடசாலையில் பெற்றோர் நேற்று போராட்டம்

கிளிநாச்சி,மார்ச் 26

பூநகரி முக்கொம்பன் பாடசாலைக்குள் ஆசிரியர்களை உட்செல்ல விடாது அந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பூநகரி முக்கொம்பன் பாடசாலை அதிபர் மற்றும் இரு ஆசிரியர்கள், சக ஆசிரியர் ஒருவரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார்களெனக் கூறியே பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பூநகரி முக்கொம்பன் பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்ற மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்துக் கடந்த வருடம் உயிரிழந்தார்.

அவன் உயிர்மாய்ப்புக்குக் காரணம், மாணவியின் தந்தையின் மதுப் பாவனையே என்று மாணவிஎழுதியதுஎன்று கூறப்பட்ட கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பபட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

எனினும், குறித்த பாடசாலையில் கற்பிக்கும் யாழ்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே அந்த மாணவியின் இறப்புக்குக் காரணமெனக் கூறி சகமாணவி ஒருவர் தெரிவிப்பது போன்ற கடிதம் ஒன்று பாடசாலை அதிபர், கிளி வலயக் கல்விப் பணிமனை, கரைச்சி சிறுவர் பெண்கள் விவகார பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் போன்றவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதம், யாழப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியரின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்காகவே எழுதப்பட்டுள்ளது என்றும், அதற்கு அதிபரும், இரண்டு ஆசிரியர்களுமே காரணம் என்றும் தெரிவித்தே பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்

சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் வந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர், பழைய மாணவர்கள், கிராம மட்ட அமைப்பினர் மற்றும் முக்கொம்பன் கிராம அலுவலர் உள்ளிட்ட 10 பேர்கொண்ட குழுவினருடன் பேசினர். சந்திப்பை அடுத்து மூன்று மாத காலத்துக்குள் அந்தப் பாடசாலையின் அதிபரை இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதனை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

பாடசாலையின் உதவி அதிபர் உட்பட 22 ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோருடன் கலந்துகொண்டிருந்தனர். குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர்களில் ஒருவர், பாடசாலைக்குள் நுழையவிடாது பெற்றோர் தன்னைத் தாக்கியுள்ளனர் என்று பூநகரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொண்டு அவரது கருத்தைப் பெற முயற்சித்த போதும் அவர் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. (ப-12,13)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர்களின் 'ஊக்கி அமைப்பின்' மூலம், டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்குக் காலணிகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் 50 மாணவர்களுக்குக் காலணிகள் வழங்கப்பட்டன. (ச-159)

# வயல் நிலங்களை விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு மனு கையளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லாவினால் கோரிக்கை மனுவொன்று ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று நித்தகைக் குளத்தின் கீழான வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவிக்கப்பட்டு ஆறுமுகத்தான் குளத்தில் வயல் நிலமின்றி வாழ்கின்ற 110 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மனுவே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது. (வ-13)

# பியர் பகுதியில் டிஜிட்டல் கடவை

## கூட்டமைப்பு எம்.பிக்களிடம் போக்குவரத்து அமைச்சர் உறுதி

மன்னார், மார்ச் 26

தலைமன்னார் பியர் பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையை நவீன டிஜிட்டல் முறையில் அமைத்து தருமாறு போக்குவரத்து ஆலோசனைக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

போக்குவரத்து அமைச்சு சார் ஆலோசனைக் கூட்டம் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் நடைபெற்றது. இதன்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், தலைமன்னார் பியர் பகுதியில் காணப்படும் ரயில் கடவை, பாதுகாப்பற்ற ரயில் கடவையாகக் காணப்படுகிறது. இதன் காரணமாகவே கடந்த 16 ஆம் திக்தி பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ் மீது ரயில் மோதியது. ஒரு மாணவன் உயிரிழந்தான். 24 பேர் காயமடைந்தனர்.

அந்த இடத்தில் இவ்வாறான விபத்துக்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு அந்த இடத்தில் நவீன மயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் பாதுகாப்பு ரயில் கடவை அமைக்கப்படவேண்டும் என்று அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட போக்குவரத்து அமைச்சர், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணி நிறைவடையும் வரையில் அந்தப் பகுதியில் இறுக்கமான பாதுகாப்பு ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (கு-213)



# விழிப்புணர்வு கருத்தமர்வு

கொடிகாமம், மார்ச் 26

வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் பசுமைப்புரட்சி செயல் திட்டத்தின் தொடர்ச்சியான செயல்பாடாக சாவகச்சேரிப் பிரதேசத்தில் இருக்கும் சங்கத்தானை சிறீ முருகன் முன்பள்ளி சிறார்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன.

இதன்போது, மரநடுகையின் பயன்கள் மற்றும் இயற்கை சார் விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வும் இடம்பெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# RBCC Sri Lanka Finals இறுதிச் சமரில் சென்ட்ரல் கெம்பஸ் கொழும்பு மற்றும் இம்பெரியல் கல்லூரி

இந்தாண்டு கொரோனாத் தொற்று நோய் காரணமாக உலகம் முழுவதும் எழுந்துள்ள பல்வேறு விதமான சவால்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் 'ரெட் புல்' பல்வேறுபட்ட முரண்பாடுகளையும் தடைகளையும் மீறி, 'ரெட் புல் கம்பஸ் கிரிக்கெட்' (RBCC) தனது ஒன்பதாவது தடத்தைப் பதிக்கத் தேவையான சுகாதார மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளைச் சரிவர மேற்கொண்டு நடத்தி வருகின்றது. இளம் மற்றும் கிரிக்கெட்டில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச தரத்தில் மிளிர்வதற்கான வாய்ப்பையும் அவர்கள் பயிலும் உயர் கல்வி கல்லூரிகளுக்குச் சார்பாகவும் நாட்டுக்காகவும் பிரதிநிதிப்ப டுத்தப்பட்டு விளையாட ஒரு சிறந்த வாய்ப்பை 'ரெட் புல்' இதனூடாக வழங்குகின்றது.

இப்போட்டியின் முதல் கட்டம் இம்மாதம் கொழும்பு பி.ஆர்.சி. மைதானத்தில் ஆரம்பமாகி இனிதே நடைபெற்றது. 13 ஆம் திகதி அரையிறுதிப் போட்டியுடன் நிறைவடைந்து இன்று இப்போட்டியின் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இப் போட்டியில் சென்ட்ரல் கல்லூரி Central Campus Colombo, Kotela wala Defense University (KDU), ESOFT, Royal Institute of Colombo, Sri Lanka Institute of Information Technology, Imperial College, Sri Lanka Institute of Management, SAEGIS, ICON Business School, Sri Lanka Technological Campus, ACBT; மற்றும் ICBT Campus ஆகியவை சிறப்பாக பங்குபற்றின.

அரையிறுதிப்போட்டிக்கு Central Campus Colombo (CCC) அணியினர் வெற்றிகரமாக முன்னேறியுள்ளனர். காலிறுதிப்போட்டியில் SAEGIS அணியினர் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர். அரையிறுதிப்போட்டியில் SLIIT அணியை வீழ்த்திய SLIM அணிக்கு எதிராக களம் கண்டு 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர். அதிதிறமையான இரு அணிகளில் CCC சிறப்பாக துடுப்பாடி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Central Campus Colombo (CCC) நட்சத்திர வீரராக ஹேஷான் 55 ஓட்டங்களைப் அணிக்குப் பெற்றுத்தந்தார். சுமிந்து விஜேசிங்க மற்றும் தேஷான் பெர்ணான்டோ தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர். இதற்கிடையே, அரையிறுதிப் போட்டியில் கனிஷ்க உகல்பய 12 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்று சிறப்பாக ஆடி நட்சத்திர வீரராக உருவெடுத்தார்.

மிகவும் எதிர்பார்ப்புக்குள்ளான இரண்டாவது அரையிறுதிப் போட்டி Imperial College மற்றும் ESOFT இடையே நடைபெற்றது. ACBT அணியை வீழ்த்தி Imperial College அரையிறுதிக்கு தெரிவானது. காலிறுதிப்போட்டியில் KDU அணி இரண்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதற்கிடையே, ESOFT அணியினர் SLTC யுடன் களம் கண்டு அரையிறுதிக்கு நுழைந்தனர். மேலும் காலிறுதிப்போட்டியில் ICBT அணிபோட்டியின்றி (walkover) வெற்றிப்பெற்றது.

இரண்டாவதுஅரையிறுதிப்போட்டியில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் Imperial College வெற்றிப்பெற்றது. ESOFT அணியினரால் 19.5 ஓவர்களில் பந்து பரிமாற்றங்கள் பந்து வீசப் Imperial College இல் சஜித் பிரியல் நட்சத்திர துடுப்பாட்ட வீரராக மிளிர்ந்தார். இப்போட்டியில் மற்ற குறிப்பிடத்தக்க வீரர்களாக பவன்த்த வீரசிங்க 32 ஓட்டங்களைப் பெற்றார், நெரன்ஜன வன்னியாராச்சி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தி சிறப்பாக தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ESOFT நட்சத்திர வீரர்களாக ரமிந்த விஜேசூரிய மற்றும் கவிந்து இரோஷ் முறையே தலா 31 ஓட்டங்களை குவித்தனர். பவந்த வீரசிங்க மற்றும் அயேஷ் ஹர்ஷனா இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

இதுபோன்று மிகுந்த எதிர்பாரா திருப்பமாக அரையிறுதிப்போட்டியில் RBCC போட்டித் தொடரில் புதிதாக களம் கண்ட இரு அணிகள் பெருவெற்றியை தமதாக்கிக்கொண்டன. CCC மற்றும் Imperial CollegeBRC CollegeBRC மைதானத்தில் நடைபெற்ற இறுதிச்சமரில் மோதிக்கொண்டன. 135 ஓட்டங்கள் எனும் இலக்குடன்ஆடிய Imperial College அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை சுவீகரித்துக்கொண்டது. போட்டியின் நட்சத்திரஆட்டக்காரராக CCC அணியின் சமிந்த விஜேசிங்க 42 ஓட்டங்கள் மற்றும் 9 விக்கெட்டுகளை கைப்பற்றியதன் மூலம் தெரிவுசெய்யப்பட்டார். Imperial College அணியின் அயேஷ் ஹர்ஷன 11 ஓட்டங்களும் 9 விக்கெட்டுகளையும் பெற்று மேலுமொரு சிறந்த நட்சத்திர ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார். CCC அணியின் நிபுன் மலிங்கவும் சிறந்தமுறையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தி 35 ஓட்டங்களும் 8 விக்கெட்டுகளை பெற்றுக்கொண்டார். இளம் வீரர்களுக்கு சர்வதேச மேடையில் மிளிர்ந்திடவும் அவர்களுக்கான ஒரு சிறந்த அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுக்க RBCC ஓர் உன்னத வழிவகுத்தலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாரம்பரியத்தை, இம்முயற்சியை மேலும் விஸ்தீரமாக்கும் நோக்கில் Red Bull மகளிர்களுக்கான கிரிக்கெட் போட்டித் தொடரை இந்த ஆண்டு நடாத்துவதற்கான திட்டத்தை வகுத்துள்ளது. BigGirlsCna எனும் ஹேஷ்டெக்குடன் பெண்களுக்கான விளையாட்டுக் களத்தை விஸ்தீரமாக்கி அவர்களின் திறமைகளை உலகுக்கு காட்ட Red Bull தயார். Red Bull தனது நீண்டகால இலக்கை இதன் RBCC Sir Lanka fianls அடைந்துள்ளது உறுதி. பள்ளி மற்றும் கிரிக்கெட் சங்கங்களில் உள்ள கிரிக்கெட் வீரர்களுக்கி டையே காணப்படும் இடைவெளியை இதன் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தகதாகும். ஏராளமான வளர்ந்து வரும் திறமையாளர்கள் காணப்படுவதால். இம்முறை RBCC Sir Lanka fianls வெற்றிவாகை சூடிய Imperial College அணி இலங்கை சார்பாக ஓமானில் நடைபெறவுள்ள RBCC World Finals இல் இந்த ஆண்டு களம் காணவுள்ளமை குறிப்பிடத்தகதாகும்..



Mr. Priyal Silva
Deputy General Manager
(Sales and Channel Management)
Bank of Ceylon

# உங்கள் குழந்தையின் எதிர்காலத்துக்கு அரணாக விளங்கும் இலங்கை வங்கியின் 'ரண் கெகுளு ஸ்மாட்' கணக்கிடமிருந்து தரம் 1இல் புதிதாக நுழையும் பிள்ளைகளுக்கான பரிசுகள்!

ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தை மேன்மை பெற்று வாழப் பிறந்ததாகவே நம்புகிறார்கள். இந்நம்பிக்கை மெய்ப்பட வேண்டுமெனின் அவர்கள் தங்கள் அன்புக் குழந்தைகள் பேராற்றல் பெற்று வளர்வதற்கேற்ற சிறந்தவொரு பொருளாதாரப் பின்னணியை அமைத்துக் கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். அந்தவகையில், தம் கனவுகளை நோக்கிப் பயணிக்கும் சின்னஞ் சிறார்களை ஊக்குவிக்கும் முகமாக ரண் கெகுளு ஸ்மாட் கணக்கில் 1500 ரூபாயினை வைப்பிலிடும் முன் பள்ளி மற்றும் தரம் 1இற்கு புதிதாக நுழையும் குழந்தைகளுக்கு புத்தகப் பை ஒன்றையும் 500 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரை வைப்பிலிடும் குழந்தைகளுக்கு அழகான படப் புத்தகம் ஒன்றையும் இலங்கை வங்கி பரிசாக வழங்கவுள்ளது. மேலும், நாடு முழுவதுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகர்களிடம் புதிய ரண் கெகுளு ஸ்மாட் கணக்குப் புத்தகத்தை அல்லது வங்கி அட்டைகளை வழங்குவதன்மூலம் வாடிக்கையாளர்கள் விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு வைப்புக்கும் அதிகபட்சமாக 1000 ரூபாய் வரையான வெகுமதிகளும் வழங்கப்படும். இச்சலுகைகள் யாவும் குறிப்பிட்ட காலம் வரையில் மட்டுமே நடைமுறையில் இருக்கும். பல நன்மைகளை உள்ளடக்கிய இச்சிறுவர் சேமிப்புக் கணக்கானது நாட்டின் அடுத்த தலைமுறைத் தலைவர்களான குழந்தைகளை அவர்களின் தற்சார்புப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

சாதாரண சேமிப்புக் கணக்கோடு ஒப்பிடும்போது 1.5% கூடுதல் வட்டியைக் கொண்ட ரண் கெகுளு கணக்கானது உங்கள் குழந்தையின் எதிர்கால முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளை வழங்குகிறது. ரண் கெகுளு ஸ்மாட் கணக்கில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் கணக்கின் அண்மைய பத்துக் கொடுக்கல் வாங்கல்களைச் சரிபார்க்கவும், வைப்புகளை மேற்கொள்ளவும் கணக்கின் இறுதிக் கணக்கு நிலுவைகளைப் பெறவும் ஒரு இலத்திரனியல் அட்டையும் வழங்கப்படும். பெற்றோர் / பாதுகாவலர் கணக்குகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பொருட்டு அவர்களின் தொலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தி விழிப்பூட்டல்களும் அனுப்பப்படும்.

ரண் கெகுளு ஸ்மாட் கணக்கை ஒரு குழந்தை சார்பாக 18 முதல் 60 வயதுக்குட்பட்ட எவரும் திறக்க முடியும். சேமிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும் குழந்தைக்கு 18 வயதாகும் வரை வெகுமதிகளை அள்ளித்தரும் என்பதோடு குழந்தை 18 வயதை எட்டியதும் இக்கணக்கு இளைஞர் சேமிப்புக் கணக்காக மாற்றப்படும். இந்த முதலீட்டின் மூலம் குழந்தையின் முழு எதிர்காலத்தையும் பாதுகாக்கும் விடயமாக இது அமைகிறது.

இக்கணக்கை வங்கியின் "ஸ்மார்ட் பாஸ்புக்' செயலியின் மூலமாகவும் நிர்வகிக்க முடியும். பெற்றோர் அல்லது பாதுகாவலர் தங்கள் கணக்கிலிருந்து அந்தந்த ரண் கெகுளு ஸ்மாட் கணக்குக்கு ஒரு நிலையியற் கட்டளையை ஏற்பாடு செய்யலாம். இதன்மூலம் குடும்பத்தின் தற்போதைய பொருளாதார நிலையின் மீது அதிக சுமையை ஏற்றாது பல ஆண்டுகளுக்கான பிள்ளையின் பொருளாதாரத்தை எளிதாகக் கட்டமைக்க முடியும். குழந்தையின் எதிர்கால வெற்றியை அவர்களின் பெற்றோர் கண்ணாரக் காணும் போதுதான் அவ்வெற்றி அர்த்தமுள்ளதாகின்றது என்பதை இலங்கை வங்கி நன்கு புரிந்துகொண்டுள்ளது. ஆகவே தான், ரண் கெகுளு ஸ்மாட் கணக்கானது பெற்றோர் / பாதுகாவலர்களினதும் குழந்தையினதும் வாழ்க்கையின் பெறுமதியைக் கருத்திற்கொண்டு காப்புறுதி ஒன்றை வழங்குகிறது. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) குறைந்தபட்சம் ஒரு இரவு உட்பட 24 மணிநேரம் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய ஒரு சம்பவத்திற்கு கணக்குரிமையாளர் மருத்துவக் காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்குக் குறைந்தபட்சம் 5000 ரூபாயினை குறித்த சம்பவம் நிகழ்வதற்கு முன்னர் பன்னிரண்டு மாதங்களுக்கு மேலாகக் கணக்கில் பேணியிருத்தல் வேண்டும். தவிர, வங்கி தீவிர நோய் மற்றும் அவசரநிலைகள் எனக் குறிப்பிட்டுள்ள 12 சூழ்நிலைகளுக்கு அறுவைசிகிச்சை மற்றும் மருத்துவமனையில் சேர்ப்பதற்கான காப்பீடாக அதிகபட்சமாக 150, 000 ரூபாய் வரை வழங்கப்படும். குழந்தையின் சார்பாக கணக்கைத் திறக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் 65 வயது வரை அதிகபட்சம் 2 மில்லியன் ரூபாய் வரையான ஆயுள் காப்புறுதி அல்லது நிரந்தர இயலாமைக்கான காப்பீடு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவராவர். ஆனால் இதற்காகக் குறைந்தபட்சம் 50,000 ரூபாயினை குறித்த சம்பவம் நிகழ்வதற்கு முதற் பன்னிரண்டு மாதங்களுக்கு மேலாகக் கணக்கில் தொடர்ச்சியாகப் பேணியிருத்தல் வேண்டும். இக்காப்புறுதிச் சலுகைகள் 2023ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை மட்டுமே செல்லுபடியாகும். மேலதிகத் தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையை நாடவும் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக வங்கியின் அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளவும். தவிர, வங்கியின் முகநூல் பக்கம் அல்லது வங்கியின் www.boc.lk என்ற வலைத்தளத்தின் ஊடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். புதிய ரண் கெகுளு ஸ்மாட் கணக்கின் அறிமுகமானது வாடிக்கையாளர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை வழங்குதல் என்ற தனது வாக்குறுதிக்கு இலங்கை வங்கி உண்மையாக இருக்கின்றது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக தங்கியிருப்பதன் சிரமங்கள் நேற்றைய கதையின் தொடர்ச்சி


## அங்கம் 5

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். **இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 5ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.**


**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**




சில மாதங்கள் கடந்தும் ராஜாவினால் தொழிலொன்றை தேடிக்கொள்ள முடியவில்லை. அவரிடம் பொருத்தமான தங்குமிடமோ போதுமான பணமோ இருக்கவில்லை.



தொழில் முகவர் தன்னை ஏமாற்றி விட்டதை உணர்ந்த ராஜா




இடைத்தங்கல் நாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்பி விட விரும்பினார்



தன்னைப் போலவே அனேக மானோர் நிர்க்கதிக்கு உள்ளாகியிருப்பதையும்



குடிவரவு சட்டங்களை மீறியதற்காக அந்நாட்டு அதிகாரிகளால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதையும் அறிந்து கொண்ட ராஜா



இடைத்தங்கல் நாட்டினுள் சட்டத்தின் பிடியிலிருந்து மறைந்திருக்க முடிவு செய்தார்.

**வினா : தமது தாய் நாட்டிற்கு திரும்பிச்செல்வதற்கு ராஜா என்ன செய்ய வேண்டும்?**




**விடை 1:** ராஜா சுயமாக இலங்கைக்கு திரும்பிச்செல்ல வேண்டுமாயின் என்ற +94774410086 IOM ஹொட்லைன் இலக்கத்தை அழைத்து மீள் திரும்புவது பற்றிய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.



**விடை 2:** புலம்பெயர் நாட்டிலுள்ள குடிவரவு அதிகாரிகளிடம் சுயமாக சரணடைந்து இலங்கைக்கு திரும்பிச்செல்வதற்கு முன்வர வேண்டும்.

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S5 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S5 விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்
உதாரணம்: S5 3,4 22.03.2021 – உதயன், ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்.

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)**

80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்

## அமைச்சர் கெஹலிய உறுதி

**கொழும்பு,மார்ச் 26**

**வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம். தேர்தலைப் பிற்போடுவது எமது கொள்கை அல்ல. தேர்தலை நடத்துவதே எமது கொள்கை. எனவே, எதிர்வரும் நாள்களில் இது குறித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து, உரிய நேர காலத்தில் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.**



இவ்வாறு ஊடக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் இந்தப் பதிலை அளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

13 ஆவது திருத்தம் என்பது அரசமைப்பின் அடிப்படைச் சட்டமாகக் காணப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தல் என்பது, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஒரு பகுதி. ஆனால், கடந்த அரசால் ஏதோ ஒரு காரணத்துக்காக இரவு 9 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தி, மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் சட்ட வரைபை நிறைவேற்றி, தேர்தலைப் பிற்போட்டனர். தேர்தல் மீது அவர்களுக்கு இருந்த பயத்தாலேயே அவ்வாறு செய்தனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2 வருடங்கள் பிற்போட்டது மாத்திரமன்றி, மாகாண சபைத் தேர்தலும் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் அடிப்படைச் சட்டத்தை மீறி, நாம் ஒரு போதும் செயற்படப் போவதில்லை. அது பற்றிக் குழம்பிக்கொள்ளவும் விரும்பவில்லை. எந்த முறையில் தேர்தலை நடத்தவது என்பதே இங்குள்ள பிரச்சினை. எனவே, தேர்தலை நடத்தும் முறை குறித்துக் கலந்துரையாடப்பட்டு வருவதுடன், இது குறித்த அமைச்சரவைப் பத்திரம் ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது - என்றார். (க-இ)

# தேசிய விளையாட்டு தினமாக ஜூலை 31

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு,மார்ச் 26

தேசிய விளையாட்டு தினமாக ஜூலை 31 ஆம் திகதியை அறிவிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ச இதற்கான முன்மொழிவை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

2014 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 6 ஆம் திகதி தேசிய விளையாட்டு தினமாக கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

ஏப்ரல் மாதத்துக்குள் நாட்டில் பண்டிகை மற்றும் புத்தாண்டு ஏற்பாடுகள் காரணமாக மக்கள் கவனத்தை ஈர்ப்பதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு, தேசிய விளையாட்டு தினத்துக்கான திகதியை மாற்றுவதற்கு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (க-இ)

# செரமிக் உற்பத்திகள், சேலைகள் இறக்குமதிகளுக்கு தடை நீக்கம்?

கொழும்பு,மார்ச் 26

செரமிக் உற்பத்திகள் மற்றும் சேலைகள் மீதான இறக்குமதித் தடை நிபந்தனையுடன் தளர்த்தப்பட்டுள்ளது.

180 நாள்கள் கடன் திட்டத்தின் பிரகாரம், செரமிக் தயாரிப்புகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் சேலைகள் இறக்குமதிக்கான அனுமதியும் 90 நாள்கள் கடன் திட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் பற்றிக் மற்றும் கைத்தறி ஆடைகள் உள்ளடக்கப்படவில்லை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்வைத்திருந்த பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் அனுமதிக்காக, பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# வலய ரீதியாக மக்களுக்கு தடுப்பூசி

கொழும்பு,மார்ச் 26

நாட்டுக்குக் கொள்வனவு செய்யப்படும் தடுப்பூசிகள், மேல் மாகாணம் மற்றும் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ள மாகாணங்களுக்கு முதலில் வழங்கப்படும். குறித்த தடுப்பூசியை வலய ரீதியில் வகைப்படுத்தி, மக்களுக்குச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக, இலங்கையின் சனத்தொகையில் 14 மில்லியன் மக்களுக்குத் தடுப்பூசி வழங்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதன் ஆரம்ப கட்டமாக, 5 மில்லியன் மக்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும்.

ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக்வி தடுப்பூசியை, அவசர தேவைக்காகப் பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய, முதற் கட்டமாக 7 மில்லியன் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை 69.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கொள்வனவு செய்ய, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் இந்தத் தடுப்பூசிக்கான நிதியை, திறைசேரியிலிருந்து பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# ஐ.தே.கவை பலப்படுத்த ரணில் அதிரடித் திட்டம்

கொழும்பு,மார்ச் 26

ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு கட்டமாக, புதிய அதிகாரிகள் சபையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் தேர்தல்களின்போது ஐ.தே.க. வெற்றியீட்டுவதாயின், 70 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த இலக்கை அடைவதற்கு, அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து, அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

இறுதியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தூர விலகிச் சென்ற சிங்கள பௌத்த, கத்தோலிக்க, மத்திய தரக் குடும்பங்களைச் சேர்ந்த வாக்காளர்களினதும், கட்சியை விட்டுச் சென்றவர்களின் வாக்குகளையும் பெற்றுக்கொள்ள, கட்சி நடவடிக்கை எடுக்கும்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக, மாவட்ட ரீதியில் எமது அதிகாரிகள், கட்சி உறுப்பினர்கள் இடையிலான தொடர்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, எமது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படும். இந்தப் பணிகள், இப்போது நிறைவடையும் கட்டத்தை அடைந்துள்ளன- என்றார். (க-இ)

# இந்திய தடுப்பூசிகள் விரைவில் கிடைக்கும்

கொழும்பு,மார்ச் 26

இந்தியாவின் ஒக்ஸ்போர்ட் எக்ஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் 5 லட்சம் டோஸ்கள் விரைவில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் தடுப்பூசி கேள்வி அதிகரித்துள்ளதால், ஒக்ஸ்போர்ட் எக்ஸ்ட்ரா செனகாதடுப்பூசிகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பணிகளை இந்தியா தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கைக்கு தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று இந்தியா உறுதி அளித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# மார்ச் 31 இல் ரஞ்சனின் மனு மீதான தீர்மானம்

கொழும்பு,மார்ச் 26

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படுவதற்கு எதிரான எழுத்தாணை உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில், எதிர்வரும் 31 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றால் அறிவிக்கப்படும்.

மனுதாரரான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதியுடன் 3 மாதங்கள் பூர்த்தியாகின்றன.

அதற்கு முன்னர் இந்த மனுத் தொடர்பான தீர்ப்பை வழங்குமாறு, ரஞ்சன் சார்பில் மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ கோரியிருந்தார்.

தொடர்ந்து மூன்று தினங்கள் இந்த மனு ஆராயப்பட்டது.



இந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி அர்ஜுன ஒபேசேகர, நீதிபதி மாயாதுன்ன கொரயா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா.தீர்மானம்

# உள்ளக விசாரணையை அரசு நடத்த வேண்டும்

## கோத்தா அரசுக்கு ஒத்தூதுகிறது சஜித் அணி

**கொழும்பு,மார்ச் 26**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றி பெற்றுள்ளதன் மூலமாக, இலங்கைக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, உள்நாட்டு விசாரணையை நடத்தியேனும் உடன் தீர்வைக் காண வேண்டும்.**

இவ்வாறு அரசை வலியுறுத்தியுள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன இது தொடர்பில் தெரிவித்ததாவது,

இராஜதந்திர ரீதியிலும், வெளிநாட்டு நட்புறவிலும் நாம் தோற்றுள்ளோம் என்ற எச்சரிக்கை ஐ.நா. தீர்மானம் மூலமாக விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக பொருளாதார ரீதியில் பலவீனமடைந்துள்ள நாம் தற்போது சர்வதேச இராஜதந்திர ரீதியிலும் பலவீனம் கண்டுள்ளோம்.

இலங்கையின் பிரஜைகளை வெளிநாட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்தவும், அவர்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை ஏற்படுவதற்கும் நாம் விரும்பவில்லை.

இலங்கையின் பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி விடயங்கள் போன்றவற்றில் எந்தவொரு தடையும் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. ஆனால், தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் பின்னர் இந்தக் காரணிகள் அனைத்துமே சவாலுக்கு உட்படும் விடயமாக மாறியுள்ளன.

நாம் என்ன செய்ய வேண்டும் என்று வெளிநாட்டவர் எமக்குக்கூற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், தேசிய ஆணைக்குழுக்களின் மூலமாக பொறிமுறை ஒன்றை உருவாக்குவோம். உள்ளகப் பொறிமுறை மூலமாக நாம் சரியாகச் செயற்பட்டால் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும் நிறைவேற்றப்படும்" என்றார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் எமது நாடு பலவீனப்பட்டமை குறித்து நாம் மகிழ்ச்சியடையவில்லை. உண்மையில் எமக்கு வேதனையே ஏற்பட்டது.

எமது நல்லாட்சி அரசின் காலத்தில் எமக்கு எதிராக எந்தவொரு பிரேரணையும் ஜெனிவாவில் கொண்டுவரப்படவில்லை. நாம் வாக்கெடுப்புக்களில் தோற்கவும் இல்லை.

தற்போதைய அரசு, இந்தியாவின் பின்னால் சென்று மேற்கு முனையத்தை வழங்கியும்கூட ஜெனிவாவில் அவர்களின் வாக்கைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது - என்றார். (க-22)

# பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை தப்பவே முடியாது

## கண்ணைக்கட்டி வித்தை காட்டாதீர் என்கிறார் மனோ

கொழும்பு,மார்ச் 26



சர்வதேச பொறுப்புக்கூறல் மற்றும் நீதி விசாரணைகளில் இருந்து, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசு இனியும் தப்ப முடியாது. சர்வதேசத்துடன் பேட்டை ரவுடியைப் போன்று முரண்பட முடியாது. அத்தகைய பிற்போக்கு அரசியல் விளையாட்டுக்கு இனிக் கால அவகாசமும் இல்லை. அதற்கு இது உள்நாட்டு மைதானமும் இல்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு, தமக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளையும் வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாத நாடுகளையும் கூட்டிக்காட்டி, ஐ.நா. தீர்மானம் தோற்றுவிட்டது என்று அரசு கூறி, சிங்கள மக்களின் கண்ணைக் கட்டி, கணக்கு வித்தை காட்டுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பெற்ற வாக்குகள் சுமார் 69 லட்சம். அவருக்கு எதிராக வாக்களித்த, வாக்களிக்காத, ஒட்டுமொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் தொகை சுமார் 90 லட்சம். ஆகவே, "வாக்களிக்காதவர்களும் நம்மவரே" என்ற அரசின் கணக்கின்படி, கோத்தாபய ராஜபக்ச தோல்வி தான் அடைந்துள்ளார். ஆகவே அவர் அரசியலை விட்டு வீட்டுக்கு போக வேண்டுமோ? என்ற கேள்வியை வெளிவிவகார அமைச்சர், தினேஷ் குணவர்தனவிடம் கேட்க விரும்புகிறேன்.

இலங்கை அரசு கனவு கண்டு, ஊரை ஏமாற்றிக்கொண்டிருக்கும் வேளையில், ஐ.நா. செயற்படப் போகிறது. அதற்கான பலமும் அதிகாரமும், இந்தத் தீர்மானம் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளது. முதற்கட்டமாக 12 விசேட ஊழியர்கள், இலங்கைக் கண்காணிப்பு தொடர்பில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தில் நியமிக்கப்படவுள்ளனர். மேலும், இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க சுமார் 29 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அலுவலகம் ஐ.நா. பொதுச் சபையிடம் கோரியுள்ளது.

இதன்மூலம், சாட்சியம் மற்றும் தகவல் ஆகியவற்றைச் சேகரிக்கும், கண்காணிக்கும் நடவடிக்கைகளை, அலுவலகம் ஆரம்பிக்கும். பாதிக்கப்பட்டோருக்கான உதவியுடன், பொறுப்புக்கூறல், நீதி விசாரணை, மனித உரிமைகள் மீறல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மீறப்படல் ஆகியவை தொடர்பிலும் கண்காணிப்பு முன்னெடுக்கப் படும். சர்வதேச கண்காணிப்பு வலையமைப்புக்குள் மீண்டும் இலங்கை வந்து விட்டது என்ற பட்டவர்த்தனமான உண்மையை அரசு தெரிந்து கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (க-இ)

# சர்வதேசத்துக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது கோத்தா அரசு

## சார்ள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 26

"ஐ.நா. தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்ற வசனம் இல்லை என்றாலும்கூட இலங்கையில் 2009 ஆம் ஆண்டும் அதற்கு முன்னைய காலங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற அநீதிகளுக்கு, சர்வதேசத்திடம் பொறுப்புக்கூறும் கடப்பாடு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு உள்ளது."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

"போர்க்காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்ட நிலையில், இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுயமாக வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் சர்வதேச விசாரணைகளைக் கோருகின்றோம்.

இந்தத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்ற சொல் நீக்கப்பட்ட போதிலும், சர்வதேசத்துக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாடு உள்ளதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை இன்று சீனாவின் மாநிலமாகவும், பங்களாதேஷிடம் கடன் கேட்கின்ற நிலையிலும் உள்ளதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது நாட்டை சோமாலியா போன்ற நிலைக்குக் கொண்டு செல்லும். தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் ஐ.நா. தீர்மானத்தில் இல்லாவிட்டாலும், இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் தீர்மானம் கொண்டு வந்த பிரிட்டனுக்கும், அதற்கு ஆதரவு வழங்கிய, நடுநிலை வகித்த நாடுகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்" - என்றார். (ஐ-22)

# இலங்கையில் இனப்படுகொலையை இராணுவத்தினர் புரியவில்லையாம்!

## மொட்டுக் கட்சி எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு,மார்ச் 26



இலங்கை இராணுவத்தினர் இனப்படுகொலையை முன்னெடுத்தார்கள் என்று குறிப்பிடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப் புலிகள் அமைப்பினரே தமிழர்களின் அடிப்படை உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கினர்.

இவ்வாறு ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 46|1 தீர்மானத்தை அரசின் தோல்வி என எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

இந்தத் தீர்மானம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டதல்ல. மாறாக 30 வருட கால போரை நிறைவுக்குக் கொண்டுவந்த இராணுவத்தினருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது என்பதை எதிர்த்தரப்பினர் தெரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஜெனிவாவில் இலங்கை விவகாரம் ஒவ்வொரு வருடமும் பேசப்படுகின்றது. இதனால் சாதாரண தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்பெறாது.

தமிழ் மக்களின் உரிமைகளை இராணுவத்தினர் பறித்தார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் இளைஞர், யுவதிகளை விடுதலைப் புலிகள் அமைப்பினர் பலவந்தமாகப் போராட்டத்தில் இணைத் துக்கொண்டனர். சிறுவர்கள் கூட பலவந்தமான முறையில் போராளிகளாக்கப்பட்டனர். இதனை மனித உரிமை மீறலாக ஏன் சர்வதேசம் கருதவில்லை?

இலங்கையின் மனித உரிமைகளை விமர்சிக்கும் நாடுகளின் மனித உரிமைகள் சவாலுக்குட் படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முழு உலகமும் நன்கு அறிந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இவர்கள் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றமை குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை வெளிப்படைத் தன்மையுடன் அறிந்துகொள்ளலாம்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் இலங்கைக்கும், அரசுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இராணுவத்தினரையும், நாட்டின் சுயாதீனத் தன்மையையும் எந்தக் காரணங்களைக் கொண்டும் விட்டுக் கொடுக்க மாட்டோம்" - என்றார். (க-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றலில் குழப்பம் வேண்டாம்

*மக்களை ஒத்துழைக்குமாறு கோரிக்கை*

கொழும்பு, மார்ச் 26

கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் நிலையங்களில் சிற்சில குழப்பநிலைகள் ஏற்படுகின்றன. இதனால், தடுப்பூசி ஏற்றும் பணிகளில் தாமதங்கள் ஏற்படுகின்றன. எனவே இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க, பொதுமக்கள் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு கேட்டுள்ளது.

கடந்த ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொவிட் 19 நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றல் பணிகளில், இதுவரையில் சுமார் 8 லட்சத்து 40 ஆயிரம் பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியே, தற்போது இலங்கையர்களுக்கு ஏற்றப்படுகிறது. மேல் மாகாணத்துக்கு வெளியே பல பிரதேசங்களிலும் இந்தத் தடுப்பூசி ஏற்றல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

# பி.சி.ஆர்.பரிசோதனைக்கு 5,000 ரூபாவே செலவு

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் கொவிட் 19 தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனைக்கு 5 ஆயிரம் ரூபா மாத்திரமே செலவு செய்யப்படுகின்றது என்று இலங்கை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இதைவிட குறைந்த செலவிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடியும். அதிகரித்த கட்டண தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டால் மேலதிக செலவுகள் ஏற்படலாம்.

ஆனால் பி.சி.ஆர் பரிசோதனைக்கு நாளாந்தம் 80 மில்லியன் ரூபா செலவாகிறது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். இது பொய்யான தகவல். பரிசோதனைக்கான செலவுகளை சரியாகக் கண்டறியுமாறு, சுகாதார அமைச்சர் பவித்ராவுக்கு தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# மூன்று பிள்ளைகளை அநாதைகளாக்கிய விபத்து

பதுளை, மார்ச் 26

பசறை 13 ஆம் கட்டையில் இடம்பெற்ற கோர விபத்தில், குடும்பத்தலைவரும் அவரது மனைவியும் உயிரிழந்தமையால், அவர்களது மூன்று சிறு பிள்ளைகளும் ஆதரவற்றுள்ளனர்.

லுணுகலை, அட்டாவத்தையைச் சேர்ந்த அந்தோனி நோவாவா மற்றும் அவரது மனைவி பெனடிக் மொரோனா ஆகியோரே விபத்தில் உயிரிழந்தனர். இதனால் இவர்களின் 8,7மற்றும் 3 வயதுகளையுடைய பிள்ளைகள் நிர்க்கதியா கியுள்ள னர்.

"எனது மகனுக்கு உடலில் சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக மருத்துவமனைக்குச் சென்றார். மகனுக்குத் துணையாக மருமகளும் சென்றிருந்தார். அதன்போதுதான் இந்தத் துயரச் சம்பவம் நடந்தது. பிள்ளைகள் தற்போது ஆதரவற்றுள்ளனர்" என்று பிள்ளைகளின் பாட்டி தெரிவித்தார். (க-இ)

# பரிசோதனை குறைந்ததாலேயே தொற்றாளர்களும் குறைவு

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு,மார்ச் 26**

**நாட்டில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து செல்கின்றது என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்காகக் கடந்த சில மாதங்களாக நாளாந்தம் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், தற்போது நாளாந்தம் 5 ஆயிரம் வரையான பி.சி.ஆர். பரிசோதனைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மைய நாள்களில் கொரோனாத்தொற்றாளர்களின்எண்ணிக்கை குறைவடைய இதுவே காரணம்.

நாட்டின் ஆபத்தான நிலைமையைச் சரியாக மதிப்பிடுவதற்கு பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (க-இ)

# போலி நாணயத் தாள்; மக்களே அவதானம்

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் தற்போது போலி நாணயத்தாள்கள் புழக்கத்துக்கு வரும் அபாயம் இருப்பதால் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் அவதானமாக இருங்கள் என பொதுமக்களிடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை அச்சிட்ட சிலர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறான நாணயத்தாள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், அது உண்மையான நாணயத்தாளா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வியாபார நிலையம் ஒன்றை நடத்துவோராயின், இதுதொடர்பாக கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். எவரேனும் பணத்தைச் செலுத்தும்போதோ, பெற்றுக் கொள்ளும்போதோ இது தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும்" என மேலும் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# கப்பலில் ஏறி கம்மன்பில சாதனை?



கொழும்பு,மார்ச் 26

இலங்கையில் எண்ணெய்த் தாங்கிக் கப்பலில் ஏறிய முதல் எரிசக்தி அமைச்சர் என்ற பெருமையை உதய கம்மன்பில பெற்றுள்ளார்.

இது ஒரு தனித்துவமான சாதனை என்று அமைச்சர் தனது அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். "இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன (சிபிசி) தகவலின்படி, எண்ணெய்த் தாங்கிக் கப்பலில் ஏறிய முதல் எரிசக்தி அமைச்சர் நானே" என்றும் அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் கம்மன்பில கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள, எண்ணெய்த் தாங்கிக் கப்பலில் கடந்த திங்கட்கிழமை ஏறினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# மீண்டும் ஒரு கொத்தணி ஏற்பட்டால் அரசாங்கத்தின் நடவடிக்கை என்ன?

## சட்டத்தரணி சுதத் ஜயசுந்தர கேள்வி

கொழும்பு, மார்ச் 26

கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் அரசாங்கத்திடம் முறையான திட்டமிடல் இல்லாத நிலையில் மீண்டும் ஒரு கொரோனாக் கொத்தணி ஏற்பட்டால் அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மஹரகம தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சுதத் ஜயசுந்தர கேள்வியெழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட தடுப்பூசிகள் பெருமளவானோருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாகத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டவர்களுக்கு, தற்போது இரண்டாம் கட்டமாக தடுப்பூசியை கால தாமதமின்றி வழங்குவதற்கு அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகிறது ?

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் ஆரம்பத்தில் அரசாங்கம் பின்தங்கி யிருந்தாலும் தடுப்பூசிகளை நாட்டுக்கு கொண்டு வந்தேனும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. தற்போது அதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் -என்றார். (ஐ-இ)

# தேய்ந்த ரயர்களை மாற்ற காலஅவகாசம்



கொழும்பு, மார்ச் 26

தேய்ந்த ரயர்களையுடைய வாகனங்களுக்கு, புதிய ரயர்களை பொருத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வியாபார நிலையங்களில் ரயர் தட்டுப்பாடு காணப்படுவதால், அந்தந்த வாகனங்களுக்குப் பொருத்தமான ரயர்கள் வியாபார நிலையங்களில் இல்லை என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் உட்பட, போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள பலர் தெரிவித்துள்ளனர்.

தேவையான ரயர்கள் வியாபார நிலையங்களுக்கு வந்தடைந்ததன் பின்னர், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அகில இலங்கை சாரதி பயிற்சிப் பாடசாலை உரிமையாளர்களின் தேசிய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைவாக ரயர்களை மாற்றுவதற்கு கால அவகாசம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்



**மேடம்:** பயணத்தால் சிறிய நன்மை கிட்டும். வருமானம் பெருகும். உறவினரால் உதவி கிடைக்கும். வியாபாரிகளின் சிக்கல் தீரும். முன்னேற்றத்துக்கு புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்:** தைரியம் கூடும். அதிகாரிகளுடன் நெருக்கமாவீர்கள். எதையாவது கற்பனை செய்து வீண் குழப்பம் அடையாதீர்கள். பணியிட வேலைகளில் கவனமாக இருப்பது அவசியம்.

**மிதுனம்:** வேலைகளை அடுத்தவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம் வெளிநாட்டிலிருந்து வருமானம் வர அதிகம் வாய்ப்பு உண்டு. பெற்றோரின் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.

**கடகம்:** சொத்து வாங்கச் செய்த முயற்சிகள் விருப்பப்படி நிறைவேறும். திருமணம் பற்றிய பேச்சுக்கள் நல்லபடியாக முடியும். பயம் தீரும். வேலையை வேறு ஒருவரிடம் ஒப்படைக்காதீர்கள்.

**சிம்மம்:** மற்றவர் பணியை நீங்களே செய்ய வேண்டிய சூழ்நிலை அமையும். பணியாளர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். மாணவரின் படிப்புக்கு உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி:** சற்றும் எதிர்பாராமல் நல்ல வரன் அமையும். உங்களின் புகழ் கூடும். முன்பிருந்த மனக்குறைகள் தீரும். பிறருக்கு அறிவுரை சொல்லாமல் இருப்பது நல்லது.

**துலாம்:** திருமணம் முடிவாகும். மனஅழுத்தம் வந்து நீங்கும். தடைப்பட்டு வந்த நல்ல விஷயங்கள் நடக்க ஏற்பாடாகும். பணவரவு உண்டு. தர்ம செயல்கள் செய்வீர்கள்.

**விருச்சிகம் :** மனக் கசப்புக்கள் அகலும். சுபச்செலவுகள் செய்வீர்கள். கலகலப்பான சூழலை அனுபவிப்பீர்கள். குறை தீரும். குடும்பத்தினருடன் புரிதல் ஏற்பட்டு மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு:** வாழ்க்கைத்துணையின் உடல்நலனில் சிறு பிரச்சினை ஏற்பட்டு சரியாகும். புதியவர்களின் அறிமுகம் கிடைத்து கலகலப்பு கூடும். உடல்நல பிரச்னை ஒன்று சிகிச்சைக்குப் பிறகு குணமாகும்.

**மகரம்:** புதியவர்களிடம் எச்சரிக்கையாக இருந்தால் நல்லது. உங்களின் கலகலப்பான சுபாவத்தால் நட்பு வட்டம் விரியும். குழப்பங்கள் அகலும். கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு .வீடு மாற்றம், இடமாற்றம் செய்யலாமா என்று சிந்திப்பீர்கள். நினைக்க இயலாத யோகங்கள் வரலாம். பொறுப்புகள் கூடும்.

**மீனம்:** சக ஊழியர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடாதீர்கள். யாரிடமும் தேவையற்ற பேச்சுக்களை பேச வேண்டாம். வெளிநாட்டிலிருந்து சந்தோஷ செய்தி வந்து சேரும்.

# ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் ஊடகவியலாளர்களுக்குத் தடை

திருகோணமலை,மார்ச் 26

பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களுக்கு, ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப் படமாட்டார்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகா மைத்துவ அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு இந்தக் கூட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள அவசியம் எனில், கூட்டங்கள் நிறைவு பெற்றதன் பின்னர் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினுடைய தலைவர் மற்றும் உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் பங்குபற்றலுடனான, ஊடக கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்படும். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நேரடியாகப் பங்கு பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது இது தேசிய ரீதியிலான முடிவு என்று திருகோணமலை மாவட்ட செயலக ஊடகப் பிரிவினரால், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம்

கொழும்பு,மார்ச் 26

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட பெண் தொடர்பில், பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மரண விசாரணைகளின் பின்னர் சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (க-இ)

## 83 காட்டு யானைகள் இதுவரை உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 26

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் 83 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண தெரிவித்துள்ளார். மின்சாரத் தாக்கம், துப்பாக்கிச்சூடு மற்றும் இயற்கைக் காரணிகள் என்பவை காரணமாகவே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

## நீதிபதிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு. மார்ச் 26

நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட 72 நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்க நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில் ஏப்ரல் மாதம் 5 திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் கொழும்பு பதில் பிரதான நீதிவான் ஆர். எம். எஸ்.பி சந்திரசிறி கொழும்பு பிரதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். (வ-இ)

## நிலத்தடிநீருக்கு எதிரான செயலை ஆதரிக்க முடியாது!!

*புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி தெரிவிப்பு*

வவுனியா, மார்ச் 26

நிலத்தடிநீருக்கும், விவசாயத்துக்கும் ஆப்புவைக்கும் செயற்பாட்டை ஏற்கமுடியாது என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியின் வன்னி மாவட்ட செயலாளர் நி.பிரதீபன் தெரிவித்துள்ளார். வவுனியா குளத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலாமையம் தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

வவுனியாக்குளத்தில் மண்போட்டு நிரவப்பட்டு, பொழுதுபோக்குப்பூங்காவாக அமைப்பதற்கு இரண்டரை ஏக்கர் நிலத்தில் பூங்கா அமைத்தமை யாவரும் அறிந்ததே. நிலத்தடிநீருக்கும் விவசாயத்துக்கும் எதிரானதாக இருப்பதுடன் ஆப்புவைக்கும் இச்செயற்பாடை சாதாரண மக்களின் வாழ்வில் மண் அள்ளி போடும் விடயமாகவே நாங்கள் பார்கின்றோம். என்றார். (ஜ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்கால சிந்தனை

### நற்செயல்களே சிறந்த போதனை

எந்த உதவிக்கும் என்னால் பொய்களைப் பரிசாகத் தர முடியாது. உண்மை என்னை விட உயர்ந்தது என்பார் சேகுவேரா.

உண்மையான வாழ்வு என்பது சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள ஆழமான தொடர்பை வெளிப்படுத்துவதாகும். தலைமை என்பது வெளிவேடத்தனமும் தம்பட்டமடித்தலும் முதன்மை இருக்கைகளும் மாலை மரியாதைகளும் மட்டுமல்ல. சொல்வதைச் செய்வதும் செய்யக் கூடியவற்றை சொல்வதுமாகும். இன்றைய அரசியல் சமூக, மத தலைமைகளின் செயற்பாட்டு நிலை எவ்வாறு அமைந்துள்ளது?. ஆயிரமாயிரம் சொற்கள் பேசுவதைவிட உண்மைக்காக பேசுவது சிறந்தது. தீமை செய்வதை விட்டொழியுங்கள். நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள். திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள். கைம்பெண்ணுக்காக வழிக்காட்டுங்கள்" என்ற இறைவார்த்தைக்கு உயிர்கொடுப்பதே சிறந்த தலைமைத்துவத்தின் நெறிசெயலாகும். உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர் என தாழ்ச்சி எனும் சத்தமில்லா முழக்கத்தை இயேசு கற்பிக்கின்றார். மற்றவர் பார்வைக்குக் காட்சிப்படுத்தும் எந்தச் செயல்களிலும் சாட்சியமில்லை. விளம்பரமில்லா நற்செயல்களே இறைவன் முன் விலை மதிப்பானவை.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.



# சிறுவர்–முதியோர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 26

செல்வபுரம் கிராம சமூகமட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, செல்வபுரம் கிராமத்திலுள்ள சிறுவர் மற்றும் முதியோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரிட்டனிலுள்ள உள்ள திருமதி ஜீவேந்திரன் கலாநிதி குடும்பத்தினரின் நிதிஉதவியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமைமகள் கலந்து கொண்டார். அத்துடன் கிராமத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் முதியோர் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு பொருள்களும் வழங்கப்பட்டன. இதன்போது சிறுவர் மற்றும் முதியவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-19)

# எதிர்க்கட்சியின் கேள்விக்கு ஏப்ரலில் இரண்டு நாள்கள்

கொழும்பு, மார்ச் 25

எதிர்க்கட்சியினர் கேள்விகளைக் கேட்பதற்கு ஏப்ரல் மாதத்தில் இரண்டு நாள்களை ஒதுக்கி முழுநேரம் வாய்ப்பு வழங்கப்படும் என சபை முதல்வரும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொரோனா நெருக்கடி நிலைமைகளில் நாடாளுமன்றத்தில் வாய்மூல வினாக்கான விடைகளுக்கென ஒதுக்கப்படும் நேரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் எதிர்க்கட்சியினரின் பல கேள்விகள் தவறவிடப்படுகின்றன என் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

எதிர்க்கட்சியினரின் இந்தக் குற்றச்சாட்டுக்கு பதில் தெரிவித்த ஆளும் கட்சி சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன, தற்போது விடுபட்டுள்ள கேள்விகள் தொடர்பில் ஏப்ரல் மாதத்தில் இரண்டு நாள்கள் ஒதுக்கப்பட்டு எதிர்க்கட்சியினருக்கு முழுமையாக வாய்ப்பு வழங்கப்படும், ஒரு நாளில் 50 கேள்விகள் என்ற அடிப்படையில் இரண்டு நாள்களில் முழுமையாக சகல கேள்விகளுக்கும் அரசாங்கம் வழங்கும் என்றும் தெரிவித்தார். (வ-இ)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சற்குணசிங்கம் ஞானகுணாளன்

(சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டவர்)



அன்னை மடியில் 09.05.1956

சிவன் அடியில் 29.03.2018

எமைப் பிரிந்து ஆண்டு மூன்று ஆனாலும்
விழிகள் என்றும் கண்ணீரால் நிறைகிறது
மனங்களில் உன் மதிமுகம் தோன்றுதையா
தேசமெங்கும் தேடுகிறோம் எங்கள் திரவியத்தை
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில் வீற்றிருப்பாய்
ஆறாது எம் துயர் அழியாது உன் நினைவு

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நித்தம் உன் நினைவோடு வாழ்ந்திடும்
அம்மா, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

# ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களின் ஆட்டத்துக்கு கோத்தா முற்றுப்புள்ளி!!

## அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆளுநர்கள், மாவட்டச் செயலர்களே பொறுப்பு

**கொழும்பு, மார்ச் 26**

**பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அந்தந்த மாவட்டத்தின் மாவட்டச் செயலர் மற்றும் ஆளுநர் ஆகியோரே பொறுப்பு என்றும் அவர்களே திட்டங்களை முன்னணியில் இருந்து செயற்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.**



அனைத்து மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் மாவட்டச் செயலர்களுடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**உடன் ஆரம்பியுங்கள்**

சில திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் அவை செயற்படுத்தப்படாது உள்ளன. சில திட்டங்கள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன. இதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்காக அரசு பெருமளவு வட்டியைச் செலுத்தி வருகின்றது. இதனையிட்டு மக்கள் அரசையும், அதிகாரிகளையும் குறை கூறுகின்றனர். மக்களின் தேவைகளையும் மக்கள் அரசிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் விளங்கி, அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு இதுவரையில் ஆரம்பிக்கப்படாது உள்ள மற்றும் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரைவாக ஆரம்பியுங்கள்.

**சுற்றறிக்கையுடன் மட்டுப்படுத்தாதீர்**

தனி நபர் ஒருவரின் அல்லது ஒரு சிலரின் தவறு காரணமாக அனைத்து மக்களும் பாதிக்கப்படும் வகையில் சட்டங்கள் வகுக்கப்படக் கூடாது. மோசடிக்காரர்கள் மற்றும் மோசடி வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் கொண்டு வருவதற்கு தேவையான சட்டங்களை வகுக்க வேண்டுமானால் அதிகாரிகள் கிராமத்துக்குச் சென்று உண்மையான மக்களின் பிரச்சினைகளை இனங்காண வேண்டும். எளிமையாக வாழ்ந்துவரும் அப்பாவி மக்களையும் திருடர்களாக பார்ப்பது கிராமத்துக்குச் செல்லாத அதிகாரிகளே. மக்களின் தேவைகளை நிறைவேற்றும்போது சுற்றறிக்கைகளுக்கு மட்டுப்பட்டு இருக்காது அரச கொள்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

மக்கள் பிரச்சினையை முன்வைக்கின்றபோது மற்றுமொரு பிரச்சினையை காரணமாக வைத்து அதனை மூடி மறைக்க அதிகாரிகள் முயற்சிக்கக் கூடாது. மக்களின் பிரச்சினைகள் முன்வைக்கப்படும் போது கோட்பாடுகளின் [illegible] யில் மட்டும் பார்த்து [illegible] வற்றை கைவிடக்கூடாது.

**பயன்பாடற்ற காணி**

கிராமிய பிரதேசங்களில் காணி பயன்பாடு முறையற்ற நிலையில் உள்ளது. இது குறித்து கிராம மக்களுக்கு தெளிவுபடுத்தி வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கான வழிகாட்டலை வழங்குவது முக்கியமானதாகும்.

சமூக வனச் செய்கை திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் சுற்றாடல் பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வுகளை வழங்க முடியும். இது குறித்து கவனம் செலுத்தவேண்டும், என்றார் ஜனாதிபதி.

சில தரப்பினரும் சில ஊடகங்களும் தெரிவிக்கும் வகையில் சுற்றாடல் அழிவு மாவட்ட மட்டத்தில் இடம்பெறுவதில்லை என்றும் அவை ஊடக காட்சிப்படுத்தல் மட்டுமே என்றும் மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர்.

கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஒவ்வொரு மாதமும் ஆளுநர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களை சந்திக்க எதிர்பார்த்துள்ளேன் எனவும் ஜனாதிபதி இதன் [illegible] தெரிவித்தார். (ஒ.5)

நல்லாட்சி அரசு உருவாக்கிய

# பிரச்சினைகளைத் தீர்க்கவே அதிக நேரம் செலவாகிறது

## கவலைப்படுகிறார் கோத்தா

கொழும்பு, மார்ச் 26

கடந்த அரசு உருவாக்கிய பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அன்றைய அரசில் இருந்தவர்களே இன்று அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். அரசின் கொள்கை மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதுடன் அவர்கள் ஏற்படுத்திய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் அதிக நேரத்தை செலவழிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

நீண்ட காலமாக மக்களைப் பாதித்து வரும் பிரச்சினைகளுக்கு முறையான அபிவிருத்தி மட்டுமே தீர்வு. இதற்குத் தேவையான கொள்கை சட்டகத்தையும் நிகழ்ச்சித் திட்டத்தையும் அரசு முன்வைத்துள்ளது. ஜனாதிபதியாக கிராமம் கிராமமாக செல்வது உண்மையான மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்காகும். எத்தகைய கொள்கையோ திட்டமோ இல்லாத சிலர் இன்று அதையும் எதிர்க்கிறார்கள். எவ்வாறான தடைகள் மற்றும் விமர்சனங்கள் வந்தாலும் மக்களுக்காக முன்னெடுக்கின்ற வேலைத் திட்டங்களை நிறுத்தப் போவதில்லை. பொய்யான பரப்புரைகளால் மக்களை ஏமாற்றுவதற்கு இடமளிக்க முடியாது.

தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்து 16 மாதங்களே ஆன குறுகிய காலத்தில் நாட்டில் தெளிவான கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் எம்மிடம் இம் மாற்றத்தையே எதிர்பார்த்தனர். தேசிய பாதுகாப்பை உறுதி செய்து கலாசாரம், எமது பாரம்பரியம், தேசிய விழுமியங்கள் மற்றும் நாட்டின் இறைமை ஆகியவற்றை பாதுகாப்பதற்காக அரசு மிகப் பெரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது.

இக்காலத்துக்குள் உருவான பிரச்சினைகளுக்கன்றி கடந்த அரசால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளுக்கே அரசு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. 19ஆவது திருத்தத்தின் மூலம் உருவான தவறு அதில் ஒன்றாகும். 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றி அந்தத் தவறைத் திருத்தினோம். தேசிய பாதுகாப்பை பலவீனப் படுத்தியதால் [illegible] த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற் [illegible] சாரணை செய்ய அவர்களே [illegible] ஞாயிறு ஆணைக்குழுவுக்கு [illegible] நிலையும் எமது அரசுக்கே (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திரு.சபாபதிப்பிள்ளை சதாசிவம்

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த திரு.சபாபதிப்பிள்ளை சதாசிவம் நேற்று (25.03.2021) இயற்கையெய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகவதி (இந்திராணி) அவர்களின் அருமைக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சதானந்தம், அருளானந்தம், அன்பரசி, தமிழழகன், தமிழழகி, கருணாகரன், பிரபாகரன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேஸ்வரி, கௌரி, கலாநாதன் (கேசவன்), துரைநேசன், சுகந்தி, சிந்து, லகி ஆகியோரின் அன்பு மாமனாரும், வினுதன், மிதுலன், அபிராம், ஜனனன், ஆதித்தியன், சுப்ரயா, கபிலன், தினேஸ், சபேஸ், சர்மிகா, ஜனுசன், தருண், வருண், திவ்யா, நிருஷன், அஷ்வின், அருண், அகிலன், ஜெபிரா, சாதனா, சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், கனகம்மா, லக்சுமி, குணவதி, துரைச்சாமி, சந்திரமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.03.2021 அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சாம்பலோடை மயானத்தில் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்**
**வில்லியம்துரை, செல்வரத்தினம்.**

## மரண அறிவித்தல்



### சூசைப்பிள்ளை கிளைப் பிரீடீவ்

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் தற்போது கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை கிளைப்பிரீடீவ் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை ஸ்ரெல்லா ஜோசப்பின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகராசா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாரதாவின் அன்புக் கணவரும், சரணியா (யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம்), நிவேதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றெஜி, யொய்சி, கின்சிலி, யூட் ஆகியோரின் பாசமிகு அண்ணனும், செல்வரட்ணம், சசிகலா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், உதயணனின் பாசமிகு சகலனும், புவிதரன், யாதவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், றோஸ்மேரி அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, மதியம் 2 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக கொஞ்சே[illegible] சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்ற[illegible]ர்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**111/14, கலாசா[illegible]**
**திருநெல்வேலி, யா[illegible]**
**0774251332, 07[illegible]**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 'தமிழில் கையெழுத்திடுவோம்' திருமலையில் விழிப்புணர்வு





திருகோணமலை, மார்ச் 26

திருகோணமலை விஜய் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் 'தமிழில் கையெழுத்திடுவோம்' எனும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளாரின் நல்லாசியுடனும், மேலும் பல சமூக அமைப்புக்களை சேர்ந்தவர்களுடனும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

எமது தாய்மொழியிலே எமது கையொப்பம் இருக்க வேண்டும் என்றும், சமூகத்தில் யார் எல்லாம் இப்போதும் தமது கையொப்பங்களை தமிழ்மொழியில் இடுகின்றனர் என்பதை வெளிக்கொணரும் முகமாகவும் அதன் மூலம் மாணவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, பனையோலையில் கையொப்பங்களை வாங்கி அவை பாதுகாக்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)


## ஈழத்து சீரடியில் மஹா சண்டி ஹோமப் பெருவிழா 27.03.2021



அன்பான அடியார்களே!

26.03.2021 - வெள்ளிக்கிழமை
மாலை 6.00 மணி
கடஸ்தாபனத்துடன் ஆரம்பம்

27.03.2021 - சனிக்கிழமை
காலை 6.00 மணி
மஹா சண்டி ஹோமம்

பிரதமகுரு - பிரம்மஸ்ரீ வாசு ஜெயவஸ்தாங்க குருக்கள் (உரும்பிராய் சிவதர்மசாஸ்தா தேவஸ்தான பிரதமகுரு)

சர்வபோதகம் - பிரம்மஸ்ரீ மகாதேவ குருக்கள்
ஸ்ரீ வஸ்தாங்க குருக்கள் (காயத்திரி பீடம், இணுவில்)

ஈழத்து சீரடி சாய் மந்திர்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Hindu temple Liked
விருப்பு பக்கத்தினூடாக பூசைகளை பார்வையிடலாம்
ஆலயத்தினர்


## ரவி உள்ளிட்ட எண்மருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 26

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட 8 பேரை எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வரை, விளக்கமறியலில் வைக்கு மாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு பிணைமுறி ஏலத்தின் போது, அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர் எனத் தெரிவித்து, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக, கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் அவர்களது விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப் பட்டுள்ளது. (க-இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 24 . 08 . 1921



உதிர்வு 24 . 03 . 2021

### திருமதி சொக்கநாதர்பிள்ளை பார்வதி

வியாபாரிமூலை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சொக்கநாதர்பிள்ளை பார்வதி அவர்கள் 24.03.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.03.2021 வியாழக்கிழமை ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தில் நடைபெற்று நெல்லியடி ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**திரு.ஆ.சிவசுவாமி**
**தலைவர்**
**ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்**
**வதிரி, கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமைக்கான வடமாகாண வலையமைப்பு உருவாக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

**உணவை பிரதானமாகக் கொண்ட தகவல் மற்றும் நடவடிக்கைக்கான இலங்கை வலையமைப்பால், உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமைக்கான வடமாகாண வலையமைப்பு உருவாக்கப்படவுள்ளது.**

இந்த வலையமைப்பை உருவாக்குவதற்கான சந்திப்புகள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற்றன.

உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமைக்கான வடமாகாண வலையமைப்பால் உணவு உரிமை தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்லுதல், சேதன விவசாயத்தை ஊக்குவித்தல், பாடசாலை மட்டத்தில் உணவு உரிமையைத் தெளிவூட்டுதல். உணவு நுகர்வை பல்தேசிய கம்பனிகளிடம் எதிர்பார்ப்பதைக் குறைத்து உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான பாதிப்புகளுக்கு பரிந்துரை மற்றும் சட்ட ரீதியாக தீர்வு பெற முயற்சித்தல் போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்புகளில் கலந்துரையாடப்பட்டன என வடமாகாண இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

# ஜெனிவா பிரேரணையால் பொருளாதாரம் பாதிக்காதாம்

கொழும்பு, மார்ச் 26

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் பேரவையில், நிறைவேற்றப்பட்ட பிரேரணையால், பொருளாதாரத்துக்குப் பாதிப்பில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமாயின், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்ட நாடுகள் உள்ளன. அவை எமக்கு ஆதரவு வழங்கும். இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் இன்னும் உரிய வகையில் நிரூபிக்கப்படவில்லை.

இலங்கைக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்து சரியானவற்றை முன்வைப்பதற்கு தற்பொழுது இலங்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது, என்றார்.

மாநாட்டில் அரச தகவல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ருவன் சத்குமாரமும் கலந்து கொண்டார். (க-இ)

# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க மாவட்ட, கிராமிய ரீதியில் குழுக்கள்

முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவில் தொடரும் சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த மாவட்ட மட்டத்திலும் கிராம மட்டத்திலும் குழுக்கள் அமைத்து செயற்படுவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் குழுவுக்குத் தலைவராக மாவட்டச் செயலாளர் செயற்படவுள்ளார். இவரின் கீழ் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம், கடற்படை, கடலோர பாதுகாப்புத் திணைக்களம், பொலிஸ் மற்றும் சமாசம் என்பவை இணைந்து பணியாற்றவுள்ளன. கிராம மட்டங்களில் கிராம அலுவலரைத் தலைவராகக் கொண்டு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் மற்றும் சமாசப் பிரதிநிதிகள் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

இச்செயற்பாட்டின் போது வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 150 மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டுள்ள படகுகளைத் தவிர கூடுதலான படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனவா?, வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோத மீன்பிடி யில் ஈடுபடுகின்றனரா? என்பவை தொடர்பான விபரங்களைச் சேகரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இதன் முக்கிய அம்சங்களாகும். (வ-13)

# முல்லைக்கு கிடைத்த வரப்பிரசாதமே வானிலை அவதான நிலையம்

*மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, மார்ச் 26

"அதிகளவான கரையோரப் பகுதிகளைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 31 ஆண்டுகளின் பின்னர் தற்போது வானிலை அவதான நிலையம் ஒன்று இயங்கத் தொடங்கியுள்ளமை மாவட்டத்துக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமே" என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வானிலை அவதானிப்பு நிலையத்தின் திறப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அடிக்கடி காலநிலையில் மாற்றங்கள் என்ற வகையில் வறட்சி, சூறாவளி, திடீர் வெள்ளப்பெருக்கு என்பவை ஏற்படுகின்றன. இதற்கான அவதான நிலையம் மாவட்டத்தில் இல்லாத நிலையில் தற்போது திறந்துவைக்கப்பட்டுள்ளமையால் விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் உட்பட பிரதேச மக்கள் வானிலை தொடர்பான தகவல்களை இந்த நிலையத்தின் ஊடாக அறிந்து கொண்டு செயற்படக்கூடியதாக இருக்கும் - என்றார். (ஐ-19)

# இந்திய றோலர் படகுகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய றோலர்களைக் கட்டுப்படுத்துமாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மைய நாள்களாக 100 க்கு மேற்பட்ட இந்திய றோலர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இதனால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்திய றோலர்களின் வருகையைக் கட்டுப்படுத்த மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்திய றோலர்களை கடற்படையினர் கட்டுப்படுத்தலாம். ஆனால் கடற்படையினர் இந்திய றோலர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை எனவும், முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (வ-13)


## மரண அறிவித்தல்



**குமரேசு பொன்னுத்துரை**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி)**

சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசு பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்கள் 25.03.2021 வியாழக்கிழமை அமரராகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் தருமலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மலோஜினியின் அன்புக்கணவரும் அருள்மொழி (ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), சுதாகரன் (ஆசிரியர் மஹாஜனாக் கல்லூரி தெல்லிப்பளை), காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறிகாந்தன் (ஆசிரியர் கந்தளாய் பேராறு பரமேஸ்வரா ம.வி.), சியாமளா ஆகியோரின் அன்பு மாமனும் பிரவினாத், தமிழினி, தரணியா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற மயில்வாகனம், சரஸ்வதி, நமசிவாயம், ராசமணி மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் அமரர் சுப்புலட்சுமி மற்றும் சற்குணம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம்.
077 241 7067

தகவல்:
பொ.சுதாகரன் (மகன்)


## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அட்டகாசம்...

அட்டகாசம் மேற்கொண்ட இளைஞர்கள் ஊர்மக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்வியங்காட்டைச் சேர்ந்த பத்துப் பேர் கொண்ட கும்பல், ஐந்து மோட்டார் சைக்கிள்களில் வந்து அட்டகாசம் செய்தனர் என்று ஊர் மக்கள் கூறுகின்றனர்.

அங்கு கூடிய ஊர் மக்கள் அவர்களைத் துரத்திப் பிடித்துள்ளனர். இருவர் சிக்கிக்கொள்ள ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஊர்மக்களின் தாக்குதலில் அந்த இவரும் காயமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் தற்போது பொலிஸாரால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-27)

### அராலி...

76 வயதுடையவர்.

அவர் சுகவீனம் காரணமாக கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு நிமோனியா உள்ளமை கண்டறியப்பட்டிருந்தது. மருத்துவமனையில் 10ஆம் இலக்க விடுதியில் அவர் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்தார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

அதனையடுத்து விடுதியில் முன்னெடுக்க வேண்டிய சுகாதார நடைமுறைகளை மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

வவுனியா மருத்துவமனையில் உயிரிழந்தவர், வவுனியாவைச் சேர்ந்த 82 வயதுடையவர்.

இதன்படி வடக்கில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா 5 பேரும் வவுனியா மாவட்டத்தில் இருவருமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பணியை மகன் தொடர்வார்

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 26

நான் இல்லாத நேரத்தில், எனது பணியை எனது மகன் சத்துர சேனாரத்ன தொடர்வார் என்று முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ராஜித சேனாரத்ன மற்றும் அவரது மகன் சத்துர சேனாரத்ன ஆகியோர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் கடந்த திங்கட்கிழமை முன்னிலையாகியிருந்தனர். அதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். எனினும் விசாரணை தொடர்பாக அவர் கருத்து எதனையும் வெளியிடவில்லை. ஊடகவியலாளர் சுஜீவ கமகே குழுவொன்றால் கடத்தப்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (க-இ)

# விடுதலைப் புலிகள் காலத்தில் கூட புறக்கோட்டை முடங்கவில்லை

## அமைச்சர் பந்துல பெருமிதம்



**கொழும்பு,மார்ச் 26**

**விடுதலைப் புலிகள் இயங்கிய காலகட்டத்தில் கூட, புறக்கோட்டை கடைத் தொகுதிகள் மூடப்படவில்லை. ஆனால், கடந்த அரசின் காலத்தில் வற்வரி அதிகரிக்கப்பட்டதால், புறக்கோட்டை கடைத்தொகுதி ஒரு நாள் மூடப்பட்டது.**

போராட்டத்தை முடக்குவதற்காக மூன்று கடைகளை அப்போதைய நிதி அமைச்சர் 'சீல்' வைக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஆனால் நாங்கள் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே வரிக் கொள்கைகளை மறுசீரமைப்புச் செய்து வருகின்றோம்.

இவ்வாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு களில் எல்லையற்ற அரச வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில், வரிக் கொள்கைகளை அரசு மாற்றியது. மக்களால் அந்த வரிச் சுமையை சுமக்க முடியாது போய்விட்டது.

எமது அரசு சுங்க வரியைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது. தேசிய உற்பத்தியாளர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு பல தீர்மானங்களை எடுத்திருந்தோம்.

மத்தியதர வருமானம் பெற்றவர்கள் 30 வருடங்களின் பின்னர் குறைந்த வருமானத்தைப் பெறுபவர்களாக மாறியுள்ளனர். கொவிட் தொற்று உலகப் பொருளாதாரத்துக்கு இரண்டாம் உலகப் போரைவிடவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுனிசெப்பின் அறிக்கையின் பிரகாரம் 130 நாடுகளுக்கு இதுவரை ஒரு கொவிட் தடுப்பூசி கூட பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஆனால் கொவிட் தொற்றை ஒடுக்கிய சிறந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாக வுள்ளது. ஜனாதிபதியின் தலைமையின் கீழ் அரசு பல்வேறு சலுகைகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. - என்றார். (க-இ)


ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்னையா தவராஜா (சாத்திரியார்)



தோற்றம் 10 . 12 . 1934 (திருகோணமலை)

மறைவு 06 . 04 . 2020 (பிரான்ஸ்)

திதி : 26.03.2021 (திரயோதசி)

பொன்னையாவின் தவப்புதல்வன் தவராஜா நீ
சொன்னதெல்லாம் சரிதான் எனப் புகழ் வாங்கிய சோதிடன்
எம் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அண்ணாவிவளவு
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
021 224 2046

நீங்கா நினைவுடன்
பொ.மாதவராஜா
(சகோதரன்)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 01 . 1932



மறைவு 25 . 02 . 2021

அமரர் பெரியதம்பி பாலசிங்கம்

கடந்த 25.02.2021 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (27.03.2021) சனிக்கிழமை அன்று உசனில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உடனிருந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் தொலைபேசி வழியாக அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி அரவணைத்த உற்றார், உறவினர்கள், ஆசிரிய நண்பர்கள், அயலவர்கள் அனைவர்க்கும் எம் குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உசன்,
மிருசுவில்

குடும்பத்தினர்
077 343 3331



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24.06.1948

மறைவு 06.04.2020

அமரர் திருமதி
பொன்னுத்துரை நாகேஸ்வரி
(7 ஆம் வட்டாரம் புங்குடுதீவு)
திதி: வளர்பிறை திரையோதசி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆற முடியவில்லை அம்மா
அறிவு பண்பும் புகட்டி வளமுடன் வாழவைத்த அம்மாவே
நீங்கள் இல்லாமனை பொலி விழந்து போனதுவோ
காலங்கள் ஓடிக்கடந்தாலும் அம்மாவின் ஆத்ம
சாந்திக்காக முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

7/5 தாளையடி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

உங்கள் பிரிவால் துயருறும்
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள் (சுவிஸ்)
மற்றும் குடும்பத்தினர்



மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 03 . 1956



இறப்பு 24 . 03 . 2021

கனகசபாபதி தவேந்திரன் (தவே)

யாழ்.நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி தவேந்திரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.03.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகரத்தினம் (மாணிக்கம்) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் விசாகரத்தினம் (ராசன்), கருணானந்தன் (தோமஸ் - பிரான்ஸ்), தர்மதேவி (செல்வம் - அவுஸ்ரேலியா), நகுலேந்திரன் (சூட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (அவுஸ்ரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதர்சினி (அவுஸ்ரேலியா), திருவுளன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

71/17 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212221594

தகவல்
குடும்பத்தினர்.


# பேராயரை முடக்கவே அரசின் கைது நாடகம்

## ஐ.ம.ச. குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்ய வேண்டும் என்பதற்காக, காரணங்கள் எவையுமின்றி பலரும் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கொழும்பு பேராயர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை முடக்குவதற்காகவே அரசு இவ்வாறான நாடகங்களை அரங்கேற்றுகிறது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பிலும் அரசு முரண்பட்ட கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருக்கிறது. ஜெனிவாவில் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தற்போது நல்லாட்சி அரசின் மீது பழிசுமத்துகின்றது. இவ்வாறான போலிச் செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுப்போம். ஜனாதிபதியின் 'நதிகளைப் பாதுகாப்போம்' வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் எவ்வாறான கேலி நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன என்பதை பொறுத்திருந்துதான் பார்த்தாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளிக்குளம் பகுதியில் கிரவல் அகழ்வு; எம்.பிக்கள் உள்ளிட்டோர் நேரில் ஆய்வு

வவுனியா, ஓமந்தை, கள்ளிக்குளம் பகுதியில் இடம்பெறுகின்ற கிரவல் அகழ்வு தொடர்பில் கிராம மக்கள் மற்றும் கிராம அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளையடுத்து, அப்பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழாம் கடந்த திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டது.

குறித்த பகுதியில் இடம்பெறுகின்ற கிரவல் அகழ்வு தொடர்பாக அபிவிருத்திக் குழுக்கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களில் பல தடவைகள் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்படும், அது தொடர்பில் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் குறித்த விடயத்தை ஆராயும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் மாகாண சபை முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோரால் உள்ளிட்ட குழுவினர் நேரடியாகச் சென்று ஆராய்ந்தனர். (ஐ-110)


### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் புதிதாக திறக்கப் படவுள்ள Hotel இற்கு

- ➤ சமையலாளர்கள் (COOK)
- ➤ சமையல் உதவியாளர்கள்

தேவை.

**தொடர்பு: 077 366 0917**
**077 210 5286**

### ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்கு

1 மாதம் பூர்த்தியான ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு.
கழுத்து வெட்டியும் உண்டு. Rs.185/-

**தொடர்பிற்கு: 077 477 5603**


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

வணிகத்தில் முதலாம் தேர்வு (வெளிவாரி) முதலாம் அரையாண்டுப் பரீட்சை -2018

வணிகத்தில் மூன்றாம் தேர்வு (வெளிவாரி) இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை -2017

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் **பரீட்சைக்கான விண்ணப்ப படிவத்தினை 26.03.2021 ஆம்** திகதியிலிருந்து 07.04.2021 ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி – மாலை 4.15 மணிவரை) **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில்** அல்லது **www.codl.jfn.ac.lk** என்ற இணையத்தளத்தினூடகவும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம், பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**பதிவாளர்**
**25.03.2021**

## மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 07 . 1950

இறப்பு 25 . 03 . 2021

### திருமதி ஸ்கொலஸ்ரிக்கா சேவியர்

கரம்பொன்னை பிறப்பிடமாகவும் இல.42/1, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்கொலஸ்ரிக்கா சேவியர் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை பிலிப் ஆச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சேவியரின் அன்பு மனைவியும், அனிற்றா சுபாசினி (மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்கள தலைமை காரியாலயம், பத்தரமுல்ல, கொழும்பு) பாசமிகு தாயாரும், ஞானதேவா (Consul General of Sri Lanka, Sri Lanka Consulate, Karachi, Pakistan) அவர்களின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சில்வேஸ்ரர் மற்றும் கலா மரியாம்பிள்ளை (இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானபேர்ஜிற்றா, ஞானஇன்பனற்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 27.03.2021 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**42/1, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மகள்**


### O/L பரீட்சை எழுதிய மாணவர்களின் பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கான வேலைவாய்ப்பை அடிப்படையாக கொண்ட சிறந்த திட்டம்




**27. 03. 2021 ஆரம்பம்**

- G.C.E (A/L) Classes
- AAT I,II & III Classes
- CA - Business Level I & II Corporate Level

- Articles/ Practical Training எம்மால் ஒழுங்கு செய்யப்படும்.
- வகுப்புக்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும்.
- Physical/ Virtual வகுப்புக்கள் நடாத்தப்படும்.

**INSTITUTE OF BUSINESS MANAGEMENT**

Head Office
No.01, 2nd Lane,
Power House Road , Jaffna

Branch
Sathiya Building 1st Cross Street
Vavuniya 024 2222988

0777 633915 / 0777071601 / 021 2227770


## பச்சிலைப்பள்ளி
## பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை(வ-து)
### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:- காசாளர் 306/11**

சம்பள அளவுத்திட்டம் :- 17190.00–20740.00 / 170× 10–185×10

**கல்வித்தகமை:-**

**அ.** கூட்டுறவுப் பணியாளர் 12வது சம்பளத்திட்டத்தில் காசாளர் / விற்பனை அலுவல்களுடன் தொடர்புபட்ட பதவியொன்றில் இரண்டு(2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு(4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

**ஆ.** கூட்டுறவுப்பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவு சங்கமொன்றில் காசாளர்/விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு:-**

- ❖ வயதெல்லை 18-45 இருத்தல் வேண்டும்
- ❖ சங்கங்களில் பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் அச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- ❖ பதவி நிரந்தரமானது
- ❖ இலாபகரமாக இயங்கும் மாதங்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 04/2017க்கு அமைவாக வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.
- ❖ கிளிநொச்சி மாவட்டத்தை சொந்த முகவரியாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- ❖ கணனி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- ❖ மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப் பிணையும்,ஆதனப்பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத் தலைமையகத்தில் ரூபா 20.00 இனைச் செலுத்தி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10.04. 2021 ஆம் திகதிக்கு முன்னதாக **“தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், புலோப்பளை வீதி, பளை** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்
பளை

25.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 28.06.1946



இறப்பு 25.03.2021

## அம்பலப்பிள்ளை பாலசிங்கம்

வித்தகபுரம் பெரியாவிடை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலப்பிள்ளை பாலசிங்கம் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சதாரூபியின் அன்புக் கணவரும், ஆதவனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்வராசா, நாகலிங்கம், பாலசுப்பிரமணியம், செல்லமுத்து மற்றும் மனோன்மணியின் அன்புச் சகோதரரும், சர்வாம்பிகை (பிரான்ஸ்), சாரதாம்பிகை (சுவிஸ்), அனுசாம்பிகை (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 224 0881

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 14.12.1950



மறைவு 27.02.2021

கடந்த 27.02.2021 சனிக்கிழமை
அன்று இறைபதம் எய்திய

## அமரர் துரைராஜா ஸ்ரீ இலங்கராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.03.2021) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 29.03.2021 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அவரின் பிரிவு கேட்கப்பெற்றதும் உடன் நேரில் வந்து துயரத்தில் பங்குபற்றிய அனைத்து உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் வைத்தோருக்கும், இறுதி அஞ்சலி ஊர்வலத்தில் கலந்துகொண்டோர்க்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சூழாவடி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி திலகவதி அருட்பிரகாசம்



தோற்றம் 08.09.1946

மறைவு 23.03.2021

இலந்தைச் சாலை, காரைநகரைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 02, திருவள்ளுவர் ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி அருட்பிரகாசம் 23.03.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் வேலுப்பிள்ளை (ஐயம்பிள்ளை மாஸ்ரர்) - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், அரசடிக் காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியம் அருட்பிரகாசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தருமலிங்கம், பார்வதி, சொக்கலிங்கம் மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், தேவமங்கை மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற கருணைலிங்கம் மற்றும் சிவமணி, சபாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரி வைகுந்தவாசன் மற்றும் சரஸ்வதி, பாலசிங்கம், காலஞ்சென்ற இராமச்சந்திரன், செல்வநாயகம், விசுவலிங்கம், நடராஜா, தேவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 24.03.2021 நடைபெற்று தகனக்கிரியை காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.சு.அருட்பிரகாசம் (கணவர்)
077 617 6895
மற்றும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கிய...

டவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார. திருநெல்வேலியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பிரதீப் (வயது-59) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வெளிநாட்டில் உள்ளவர்களின் வீடொன்றின் பாதுகாவலராக இவர் பணியாற்றி வந்துள்ளார். அந்த வீட்டில் தினமும் ஒருவர் வாகனம் விட்டுச் செல்வது வழமை. நேற்றுக் காலை ஒருவர் தனது வாகனத்தை எடுக்கச் சென்றபோது, வீட்டிலிருந்தவர் மயங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## யாழ்ப்பாணம்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ். மாவட்டத்தில் அண்மைய நாள்களில் கொரோனாத் தொற்று நிலைமை சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது இந்த தொற்று நிலையானது அண்மைய காலங்களிலே மார்ச் மாதத்தில் உச்சபட்ச நிலைமையில் உள்ளது. மார்ச்மாதத்தில் மாத்திரம் 150 பேருக்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது தற்போதைய காலகட்டத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டிய காலகட்டமாக காணப்படுகின்றது. தற்பொழுது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அத்தோடு ஏனைய அனைத்துச் செயற்பாடுகளும் வழமைபோல் இடம்பெற்று வருகின்றன. இடர் காலமாக இருக்கின்ற இக்காலப்பகுதியில் மிகவும் அவதானமாக பொதுமக்கள் செயற்பட வேண்டும்.

அதேபோல அரச தனியார் மற்றும் ஏனைய நிறுவனங்களும் தங்களுடைய பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் தங்களுடைய செயற்பாடுகளைச் செயற்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. போக்குவரத்தின் போதும் ஏனைய செயற்பாடுகளின் போதும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுதல் அவசியமாகும். அத்தோடு அத்தியாவசியமான தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக வீடுகளில் இருந்து வெளியேறுவதைத் தவிர்த்தல் சிறந்தது. அத்தோடு பெற்றோர், பாடசாலை மாணவர்கள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

ஏனைய தரப்பினரும் இந்த விடயங்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும். குறிப்பாக திருமண நிகழ்வுகள் மரண வீடுகள் அதேபோன்ற வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள், அரச கூட்டங்கள் ஏனைய கூட்டங்களில் பொதுமக்கள் கூடும்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொது மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்று மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் தொற்று மூலங்கள் இனங்காணப்படுகின்றன. அதை ஒரு சமூகத் தொற்றாகக் கருத முடியாது. ஏற்கனவே சுகாதார வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளோம். அதேபோல் அனைத்து தரப்பினருக்கும் அனுப்பி வைத்துள்ளோம். மாவட்டத்தைப் பொறுத்தவரை சகல நடவடிக்கைகளும் வழமைபோன்று இடம்பெறுகின்ற நிலையில் பெரும் தொற்று ஏற்படும் நிலைமையானது மீண்டும் முடக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே இது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்றார். (ப)

## வடக்கில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் நேற்று 677 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 77 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 11 பேர் ஏற்கனவே தொற்று இனங்காணப்பட்டவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள்.

தெல்லிப்பழை மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கோட்டை....

யாழ்ப்பாணம் மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி நேற்று அவசரமாகக் கூடி, இந்தத் தீர்மானங்களை எடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் கோட்டை பகுதிக்கு தற்காலிகமாக மாற்றப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் கூட்டங்கள் போன்றவை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுகின்றன. நிகழ்வுகள், வீடுகளில் சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் வீடுகளில் நடத்த அனுமதிக்கப்படும்.

இறுதிக் கிரியைகளுக்கு 25 பேர் மாத்திரம் அனுமதிக்கப்படுவர் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-20,26)

## ஐ.நா....

அத்துடன், படையினருக்கு எதிரான பயணத்தடையும் நீடிக்கப்படும் அபாயம் உள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேறுவதை தடுப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளை தற்போதைய அரசு உரிய வகையில் முன்னெடுக்கவில்லை. இதனால் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு மட்டுமல்ல எதிர்காலத்தில் நாட்டு மக்களுக்கும்தான் தாக்கம் ஏற்படப் போகின்றது.

நல்லாட்சி அரசால் தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றதொரு விம்பத்தை உருவாக்குவதற்கு தற்போதைய அரசு முயற்சிக்கின்றது. ஆனால் உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேசம் தலையிடுவதற்கான களத்தை மஹிந்த ராஜபக்சவே அமைத்துக் கொடுத்தார்.

இலங்கை தொடர்பில் முதலாவது பிரேரணை முன்வைக்கப்பட்ட போது அதில் இலங்கை வெற்றி பெற்றது. 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டதால் ஆதரவு கிடைத்தது. இதன் பிரகாரம் தான் நல்லிணக்க ஆணைக்குழு, பா[illegible] ஆணைக்குழு ஆகியன அமைக்கப்பட்டன. ஆனால் உரிய வகையில் நடவடிக்கை இடம்பெறாததால் தான் பாரதூரமான பிரேரணைகள் நிறைவேறின. இந்த நிலையில் நல்லாட்சி வந்த பின்னர் சர்வதேச நெருக்கடி குறைந்தது. மின்சாரக் கதிரை உள்ளிட்ட சர்ச்சைகள் இருக்கவில்லை.

வெளிநாடுகளில் வாழும் புலிகள் பலவீனமடைந்தனர். பொருளாதார இழப்புகள் ஏற்படவில்லை. ஆனாலும் எவருடனும் கலந்துரையாடாமல் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியமை தவறான செயலாகும். எது எப்படி இருந்தாலும் ஒற்றையாட்சி, இறையாண்மை, ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் படையினரை நாம் பாதுகாப்போம். இதில் பின்நிற்கப்போவதில்லை.

இந்தியா, ஜப்பான், தென்கொரியா மற்றும் நேபாளம் உள்ளிட்ட நாடுகளின் ஆதரவைப் பெறமுடியாமல் போனமை தொடர்பில் இந்த அரசு பொறுப்புக்கூற வேண்டும். அதேவேளை, போருக்குப் பின்னர் மனித உரிமைகள், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக மாற்றுக் கருத்துகளை உடைய அரசியல்வதிகள் வேட்டையாடப்பட்டனர். இவ்வாறு உள்நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகளுக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளதையே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல தகுதியற்ற ஒருவரே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர் ஒருவர் இருந்தாலும் அமைச்சின் செயலாளரே அமைச்சை வழிநடத்துகின்றார். இந்தியாவுக்கு இன்னும் தூதுவர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் பயங்கரமானதொன்றாகும். வருகின்ற செப்ரெம்பர் மாதத்தில் இது வேறு வடிவில் கூட வரலாம். சர்வதேச விசாரணைக்கு வழிசமைக்கலாம். பொருளாதாரத்துக்கு மரண அடி கொடுக்கும் விதத்தில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான சந்தை வாய்ப்பை மூடலாம். ஜி.எல்.பி. பிளஸ் போன்ற சலுகைகள் இல்லாது போகலாம். படை பிரதானிகளுக்கான பயணத் தடை நீடிக்கப்படலாம். - என்றார். (க-44)

## இந்திய....

தவிர்த்து வந்த இலங்கைக் கடற்படையினர், திடீரென அதிரடியாக 54 மீனவர்களைக் கைது செய்துள்ளனர். அத்துடன் 5 இழுவைப் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா எதிர்க்கும் என்று கொழும்பு அரசு தெரிவித்திருந்த நிலையில், இந்தியா நடுநிலைமை வகித்திருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்தத் திடீர் கைதுகள் நடைபெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பூநகரி இரணைதீவுக் கடற்பரப்பில் வைத்து 20 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று முன்தினம் இரவு மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரண்டு இழுவைப் படகுகளில் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக எல்லைக்கு உட்பட்ட அனலைதீவு கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஓர் இழுவைப் படகுடன் 14 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் எனவும், அவர்களின் இரண்டு இழுவைப் படகுகளை கடற்படையினர் கைப்பற்றி திருகோணமலைக்கு கொண்டு சென்றனர் எனவும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் தெரிவித்தார்.

வடக்குக் கடலில் கடற்படையினர் மேற்கொண்ட இந்தத் திடீர் கைது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-ஐ-ற-13,27,214)

## கட்டுமீறியது...

நிலைய உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று ஒரு தொகுதியினரின் பி.சி.ஆர். முடிவுகள் வெளிவந்த நிலையில் 66 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நகரத்தின் மத்திய பகுதி முடக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் புதிய கொரோனாத் கொத்தணி உருவாகும் அபாயம் நிலைமை ஏற்பட்டுள்ளது. (எ-26)

## யாழ்...

பண்ணை சுற்றுவட்டத்தில் இருந்து கே.கே.எஸ். வீதியில் முட்டாஸ் கடைச் சந்தை வரையான அனைத்துக் கடைகளும் மூடப்படும்.

ஆஸ்பத்திரி வீதியில் சிவன்பண்ணைச் சந்தியில் இருந்து, மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதிவரையான கடைகள் மூடப்படும்.

முனீஸ்வரன் வீதியில் உள்ள அனைத்துக் கடைகளும் மூடப்படும். கஸ்தூரியார் வீதி, பழைய தபாலக வீதி என்பவற்றில் உள்ள அனைத்துக் கடைகளும் மூடப்படும்.

மின்சார நிலைய வீதியில் வைத்தியசாலையில் இருந்து கே.கே.எஸ். வீதி வரையான அனைத்துக் கடைகளும் மூடப்படும்.

இந்தப் பகுதிகளில் வர்த்தக நிலையங்களை வைத்திருப்போர், அவற்றில் பணியாற்றுவோர் தங்கள் சொந்தப் பிரதேசங்களில் தம்மை சுயதனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள வேண்டும். தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த பின்னர், பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டு தங்கள் பணிக்குத் திரும்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் நகரில் பாடசாலைகளில் தொற்று அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் பயிலும் வகுப்புகள் மட்டும் 10 நாள்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன. (எ-320,26)

## பாடசாலைகள்...

தெரிவித்தார்.

மாணவர்கள் எவருக்கேனும் தொற்று இனங்காணப்பட்டால் அந்த வகுப்பறை மட்டும் முடக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், தரம் 5, தரம் 11 மற்றும் உயர்தர வகுப்புக்கள் தவிர்ந்த ஏனைய தனியார் வகுப்புக்கள் அனைத்தும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைத் திரிபு வைரஸ் இந்தியாவில் கண்டறிவு!

## மாறுபாடடைந்த இரண்டு வைரஸ்கள் இந்தியாவில் 'கூட்டணி' அமைப்பு

கொழும்பு, மார்ச் 26

உலகெங்கும் கொரோனா வைரஸின் மாறுபாடடைந்த திரிபுகள் தோன்றிப் பரவி வருவது தெரிந்ததே. ஆனால் முதல் முறையாக வைரஸின் 'இரட்டைத் திரிபு' ஒன்றை இந்திய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவில் 206 தொற்று மாதிரிகளில் இரட்டைத் திரிபடைந்த வைரஸ் கிருமி கண்டறியப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தலைநகர் புதுடில்லியிலும் ஒன்பது பேரது தொற்று மாதிரிகளில் இரட்டைத் திரிபு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'இரட்டைத் திரிபு என்பது அறிவியல் ரீதியான பெயர் அல்ல. ஏற்கனவே பரவி வருகின்ற இரண்டு திரிபுகளின் குணவியல்புகள் இந்தப் புதிய இரட்டைத் திரிபு வைரஸில் கண்டறியப்பட்டிருக்கிறது. அவற்றின் இரட்டைக் குணவியல்பு காரணமாக அவற்றுக்கு' 'இரட்டைத் திரிபு' என்று பெயரிடப்பட்டிருக்கிறது இவ்வாறு தொற்று நோயியல் நிபுணர்கள் விளக்கம் அளித்துள்ளனர். (ம)




### விற்பனைக்கு

பெருக்கன், கட்டு, பூச்சு மணல், சல்லி, கண்டகல், சீமெந்துக் கற்கள்
தேவைப்படின் நேரடித் தொடர்புக்கு அழைக்கவும்
076 760 3066, 075 842 6302

### பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி சுன்னாகம்.
**BARATHY**
சித்தங்கேணி
எமது மூன்று நிறுவனங்களிலும்
**A/L 2023**
**கலை - வர்த்தகம்**
நாளை மறுதினம் ஆரம்பம்
28.03.2021
யாழ். நகர் - 8.00 am
சுன்னாகம் - 2.00 pm
சித்தங்கேணி - 10.00 am
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு 077 376 3511


## மரண அறிவித்தல்

### Dr.பரமநாதன் சுரேசன்

**(ஆயுர்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தர் முன்னாள் பிரதி ஆணையாளர், வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்)**

**தோற்றம் : 17.10.1965** **மறைவு: 25.03.2021**



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் சுரேசன் அவர்கள் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பரமநாதன் (இளைப்பாறிய உப அதிபர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) அம்பிகாவதி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரும், காலஞ்சென்ற கந்தையா துரைசிங்கம் (இளைப்பாறிய கிராம அலுவலர்) சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மரும்கனும், கௌரி சுரேசனின் (முன்னாள் கல்வியியலாளர், இளைப்பாறிய ஆசிரியை) பாசமிகு கணவரும், சம்பூர்ணியின் ஆருயிர் தந்தையும், கேஷனி, உருத்திராதேவி, சேயோன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோணேஸ்வரன், பகீதரன், பாமினி, வாசுகி, ஒளவையார், அதியமான் மோகன், கிருஸ்ணபிள்ளை, சுதர்ஷினி ஆகியோரின் மைத்துனரும், மாதுமை, வாதவூரன், சௌமியா, நந்தகோபன் ஆகியோரின் மாமனாரும், கார்த்திகா, கோகுலன், தேனுகா, சாரங்கன், நீரயா ஆகியோரின் சித்தப்பாவும், துங்கீசனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் பி.ப 1.00 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி,**
**ஆவரங்கால்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 077 6182**

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தநாயகி சிற்றம்பலம்



சுன்னாகம் மயிலணியை வாழ்விடமாக கொண்டிருந்த திருமதி சாந்தநாயகி சிற்றம்பலம் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. சிற்றம்பலம் ( திருச்சி ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிமுத்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. கிருஷ்ணகுமார், திருமதி பிருந்தா கோபிகிருஷ்ணா ( கனடா ), திரு ஆனந்த கிருஷ்ணன் ( லண்டன் ), காலஞ்சென்ற நீரஜா ஆகியோரின் அன்பு அன்னையும், திரு. கோபி கிருஷ்ணா (கனடா ), திருமதி ஜனனி ஆனந்த கிஷ்ணன் ஆகியோரின் மாமியாரும், திரு. சிவகுமார் அவர்களின் அன்பு சகோதரியும், கிருத்திகா, தருண் ஆகியோரின் பேத்தியும் திரு. திருமதி விஜயசுந்தரம், திரு.திருமதி ஏரம்பமூர்த்தி ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

இறுதி கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் .

**தகவல்**
**திரு சிற்றம்பலம் (திருச்சி )**
**திருமதி பிருந்தா கோபிகிருஷ்ணா - +1 (647) 405-6207**
**திரு ஆனந்தன் -00447515367421**

**தோற்றம் 23.12.1947** **மறைவு 25.03.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல. 361 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.